# உதயன்

சுடர் : 36 | கதிர் : 245 | சனிக்கிழமை | ஆடி 15 ஆம் நாள் 31 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# வடபகுதிக்குள் நுழைவோரால் கொவிட் தொற்று பரவுகின்றது

**ஒருநாள் பி.சி.ஆரில் மட்டும் 22 பேருக்கு தொற்று**
**வவுனியாவில் திடீர் சோதனையில் தெரியவந்தது**

வவுனியா, ஜூலை 31
தென்பகுதியிலிருந்து வடக்கு மாகாணத்துக்குள் நுழைந்தவர்களை வவுனியாவில் திடீரென்று வழிமறித்து மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 22 பேருக்கு கொவிட் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. 19 ➤

---

அரச அலுவலர்கள் அனைவருமே

## திங்கள் தொடக்கம் பணிக்கு வரவேண்டும்

*ஜனாதிபதியின் செயலர் அறிவிப்பு*

கொழும்பு, ஜூலை 31
அரச ஊழியர்கள் அனைவரும் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம், வழமைபோன்று கடமைகளுக்கு சமூகமளிக்கவேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு 19 ➤

---

## தடுப்பூசி பெறாதோர் விவரம் திரட்டவும்

*ஜனாதிபதி பணிப்பு*

கொழும்பு, ஜூலை 31
நாட்டின் சகல பிரதேசங்களிலும் தடுப்பூசி பெறாதவர்கள் தொடர்பான கணிப்பீட்டை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். கொவிட் நோயாளர்கள் மற்றும் உயிரி 19 ➤

---

## யாழ். போதனா தாதிய மாணவர்களுக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 25 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 16 ➤

---



## அதிபர், ஆசிரியர்கள் மத்துகமவில் போராட்டம்

கொழும்பு, ஜூலை 31
சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறுகோரி நேற்றுடன் 19 ஆவது நாளாக ஆசிரியர்கள், அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நேற்றும் மதுகம உட்பட பல 19 ➤

---

## எகிறும் தொற்று நேற்று 2,455

கொழும்பு, ஜூலை 31
இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 455 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதனைத் 16 ➤

## 56 பேர் சாவு

கொழும்பு, ஜூலை 31
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 56 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப் 16 ➤

---

## கோப்பாய் பொலிஸாருக்கு எதிராக 5 நாள்களுக்குள் 4 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 31
கோப்பாய் பொலிஸாரின் தாக்குதல்கள், அடாவடித்தனங்களுக்கு எதிராக கடந்த 5 நாள்களுக்குள் 4 முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் கிளைக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. உரும்பிராய் பகுதியிலிருந்து மூன்று முறைப்பாடுகளும், இருபாலை மடத்தடிப் பகுதியிலிருந்து ஒரு முறைப்பாடும் கிடைக் 19 ➤

---

## மாகாண மருத்துவமனைகளை மத்திக்கு கையகப்படுத்தல் ஆரம்பம்

*எதிர்ப்புக்களால் வடக்கில் தாமதம்*

யாழ்ப்பாணம், ஜூலை 31
மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளை கொழும்பு அரசு கையகப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. வடக்கு மாகாணத்தின் 4 மருத்துவமனைகள் மற்றும் 19 ➤

---

## ஹைஏஸ் வானில் கடத்தி பிஸ்டலால் தாக்கினார்கள்

*கோப்பாய் பொலிஸாருக்கு எதிராக இளைஞன் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், ஜூலை 31
வீதியால் சென்ற தன்னை கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் அலுவலர்கள் சிவில் உடையில் வாகனத்தில் கடத்திச்சென்று, கைத்துப்பாக்கியால் தாக்கி, வீதியில் வீசிவிட்டு சென்றனர் என்று இளைஞன் ஒருவர் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நேற்று 16 ➤

---

வடக்கு மாகாணத்தின்

## மூத்த டி.ஐ.ஜி. அலுவலகத்தில் 9 பொலிஸாருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் உள்ள வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்தில் 9 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, சுகாதார நடைமுறைகளுக்கு அமை 16 ➤

---

யாழ்.பல்கலை விரிவுரையாளர் உட்பட

## தமிழ் அரசியல் கைதிகள் நால்வர் வவுனியா நீதிமன்றால் விடுதலை

வவுனியா, ஜூலை 31
பல ஆண்டுகளாக சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் நான்கு பேர் தமது வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் நிரபராதிகள் என இனங்காணப்பட்டதைய 19 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 2 லட்சம் பேர் தடுப்பூசி பெற்றுள்ளனர்

## மாகாணப் பணிப்பாளர் தகவல்



**யாழ்ப்பாணம், ஜூலை 31**

**வடக்கு மாகாணத்தில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் முதலாம்கட்ட தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் தற்போது 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு சைனோபோர்ம் தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. 40 ஆயிரத்து 391 பேருக்கு நேற்று குறித்த தடுப்பூசி வழங்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களென, 6 லட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் உள்ளனர். அவர்களில் 2 லட்சத்து 31 ஆயிரத்து 111 பேருக்கு முதல் கட்ட தடுப்பூசி இதுவரை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதாவது வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட 35 வீதமான 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி இதுவரை வழங்கப்பட்டுள்ளது

அநேகமாக ஓகஸ்ட் மாத நடுப்பகுதிக்கு முன்னர் வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கக் கூடியதாக இருக்கும்.

அதேபோல செப்ரெம்பர் மாத நடுப்பகுதிக்கு முன்னர் இரண்டாவது கட்ட தடுப்பூசியையும் வடக்கு மாகாண மக்களுக்கு வழங்க முடியும்.

கடந்த இரண்டு தினங்களாக தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இறப்புகளும் அதிகரித்து வருகின்றது.

பல மாகாணங்களில் இறப்பு அல்லது தொற்று வீதம் மிகத்தீவிரமாக காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்திலும் நேற்று 104 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, தொற்று பரம்பலை கட்டுப்படுத்துவதற்கு இறப்புகளை கட்டுப்படுத்துவதற்கும் மூன்று வழிகள் காணப்படுகின்றன. ஒன்று, இயலுமானவரை விரைவாக தடுப்பூசிகளை கூடுதலான மக்களுக்கு பெற்றுக் கொடுப்பது. இரண்டாவது பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுதல். மூன்றாவது பொதுமக்கள் ஒன்றுகூடுவதை இயலுமானவரை தவிர்த்தல்.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராமப்புறங்களிலுள்ள கோவில்களில் சிறிய கொத்தணிகள் உருவாகி வருகின்றமையை இரண்டு வாரங்களாக அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

அதேபோல் சில பிரதேசங்களை முடக்கி வைத்து இருக்கின்றோம். வடக்கு மாகாண பொதுமக்கள் இந்த கொரோனா ஒழிப்பு செயற்பாட்டுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (த-20)

---

### கொலைக் குற்றத்துக்காக

# தளபதி, சிப்பாய் இருவருக்கும் தூக்குத்தண்டனை உறுதியானது

திருகோணமலை, ஜூலை 31

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரன் குணசேகரம் என்பவரை கொலை செய்த குற்றத்துக்காக இராணுவ கட்டளை தளபதி மற்றும் சிப்பாய்க்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை, மேன்முறையீட்டு நீதிமன்று உறுதிசெய்து அறிவித்துள்ளது.

1998ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வசித்துவந்த ஞானசிங்கம் அன்ரன் குணசேகரம் என்பவரை படுகொலை செய்ததற்காக, அச்சுவேலி 51 ஆவது படைப்பிரி வின் கட்டளைத் தளபதி மற்றும் நகர 512 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் அவரது சிப்பாய் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கின் எதிரிகளின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்திலிருந்து திருகோணமலை மேல்நீதிமன்றுக்கு குறித்த வழக்கு மாற்றப்பட்டது.

இந்தநிலையில், குறித்த வழக்கு விசாரணைகள் திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றுவந்தது.

இந்தக் குற்றச்சாட்டின்கீழ் 2007 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் தண்டனை சட்டக்கோவை 296 பிரிவின்கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பான விசாரணைகள் முடிவுற்று குறித்த வழக்கின் எதிரிகளுக்கு 2018ஆம் ஆண்டு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனால் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

அதன்போது முதலாம் எதிரியான யாழ்ப்பாணம் அச்சுவேலி 51ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி டி.ஆர்.பர்தலம்யுஸ் என்பவர் மீது நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் குற்றம் நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டார்.


இரண்டாம் மூன்றாம் எதிரிகளுக்கான குற்றச்சாட்டுகள் அரச சட்டவாதியால் நிரூபிக்கப்பட்டதால் அந்த இருவருக்கும் தூக்குத்தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

எனினும், குறித்த தீர்ப்புக்கு எதிராக இரண்டாம் மற்றும் மூன்றாம் எதிரிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 2018ஆம் ஆண்டு மேன்முறையீட்டுகான விண்ணப்பத்தை தாக்கல் செய்தனர்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அது பரிசீலிக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் இரண்டாம் மூன்றாம் எதிரிகளின் சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக குறித்த வழக்கு வாபஸ் பெறப்பட்டு அதனைத் தொடர்ந்து வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனாலும் 2018ஆம் ஆண்டு திருகோணமலை மேல் நீதிமன்று வழங்கிய தூக்குத் தண்டனை தீர்ப்பு உறுதி செய்யப்படுவதோடு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிரிக்கு தெரிவிக்கும் பொருட்டு எதிர்வரும் 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி திறந்த நீதிமன்றத்தில் குறித்த இரண்டு எதிரிகளுக்கும் வாசித்து காட்டப்படவுள்ளது. (த-இ)

---



*ஹிசாலினிக்கு நீதி கோரி*

# யாழ்.பேருந்து நிலையத்தில் தனியொருவர் கவனவீர்ப்பு

கொழும்பு, ஜூலை 31

ரிஷாத் பதியுதீன் வீட்டில் உயிரிழந்த சிறுமி ஹிசாலினிக்கு நீதி கோரி யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக மலையகத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.

"ரிஷாத் பதியுதீன் வீட்டில் ஏற்கனவே மூன்றுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்டுள்ள ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனவே, இந்த அரசு பெண்களை பாதுகாக்கும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். ஜனாதிபதி மாணிக்கக் கல் பற்றி கதைப்பதை நிறுத்திவிட்டு மகளிரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்" என போராட்டத்தில் ஈடுபட்டவர் தெரிவித்தார். (த-20)

---

# பருத்தித்துறையில் நேற்று இரு குடும்பங்கள் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம் பருத்தித்துறை அல்வாய் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். வீடொன்றும் சேதமடைந்துள்ளது. கடற்றொழில் நடவடிக்கை தொடர்பில் இரண்டு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறே தாக்குதலுக்கு காரணம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதல் மேற்கொண்டவர்கள் கிராமத்திலிருந்து வெளியேறியுள்ளனர் என்றும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)

---

# திருத்தி வாசிக்கவும்

உதயன் பத்திரிகையின் நேற்றைய பதிப்பில் 'தோட்டக் கிணற்றில் சடலமொன்று மீட்பு!' என்ற செய்தியில், குறித்த சடலம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குட்டிப்புலம் பகுதியில் உள்ள தோட்டக் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பகுதியிலேயே குறித்த சடலம் மீட்கப் பட்டுள்ளது.

---

# யாழ்ப்பாணத்தில் ஒருவர் கொரோனாவால் சாவு



யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொவிட்19 நோயால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த யாழ்ப்பாணம் சந்திரமாதா கோவிலடியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரே நேற்று உயிரிழந்துள்ளார். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 127ஆக உயர்வடைந்துள்ளது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 31

சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு இணையவழியில் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிறகுகள் அமையத்தின் சிறுவர் ஆளுமைவிருத்தி செயற்றிட்டத்தின் அங்கமாக இவ் நிகழ்வு பிரதி சனிக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது.

"சூம்" செயலி 82756248643 என்ற இலக்கம் ஊடாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் "இளம் தேனீக்கள் கழகம்" எனும் சிறகுகள் அமையத்தின் சிறுவர்களுக்கான செயற்பாடுகளை முன்னிறுத்தும் பிரிவும் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாலியல் இணையங்களை உடன் முடக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஜூலை 31



இலங்கைக்குள் செயற்படுகின்ற அனைத்து பாலியல் ரீதியிலான இணையத்தளங்களையும் முடக்க நடவடிக்கை எடுக்குமாறு, இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவுக்கு கொழும்பு மேலதிக நீதவான் லோஷனி அபேவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

பாலியல் உணர்வுகளைத் தூண்டும் வகையிலான இணையத்தளங்களுக்குள் பிரவேசித்தல், இவ்வாறான இணையத்தளங்களுக்கான பெயர்களைப் பதிவு செய்தல், கட்டணம் செலுத்துதல் மற்றும் சேவை வழங்குதல் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் அடங்கிய அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கல்கிஸ்ஸை பகுதியில் 15 வயதான சிறுமி, இணைய வழியாக பாலியல் தொழிலுக்கு ஈடுபடுத்தப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. இதன்போது நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ஓ.4)

## பணமோசடி இருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 31

கொரியாவில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவோம் என்று கூறி, பணமோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கண்டி பகுதியைச் சேர்ந்த இருவரிடம், 31 லட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் பெராதெனிய, ஜாஎல, நீர்கொழும்பு மற்றும் முருதலாவ போன்ற பல்வேறு பகுதிகளில் வசித்துள்ளனர். இருவரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முன்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தவிட்டது. (ஓ.4)

## வெள்ளை வானில் கடத்தப்பட்டு பெண்ணின் நகைகள் கொள்ளை

*வவுனியாவில் சம்பவம்*

வவுனியா, ஜூலை 31

வவுனியாவில் பெண் ஒருவரை வெள்ளை வானில் கடத்திச் சென்று அவர் அணிந்திருந்த தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கோவில்குளம் சிவன் கோவில் பகுதியில் நின்றிருந்த பெண் ஒருவரை வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்று அவர் அணிந்திருந்த தங்க நகைகளைக் கொள்ளையடித்து, அந்தப் பெண்ணை வானிலிருந்து இறக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் வழங்கிய தகவல்களை அடுத்து, பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட 28 வயதுடைய பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து வெள்ளை நிற டொல்பின் ரக வான் மற்றும் தங்கநகைகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-110)

## சமுர்த்தி வங்கி அலுவலருக்கு கோவிட்

சாவகச்சேரி, ஜூலை 31

தென்மராட்சி பிரதேச வரணி சமுர்த்தி வங்கியின் பெண் அலுவலருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த இந்த அலுவலரின் வீட்டுக்கு அருகில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் அப்பகுதியைச் சேர்ந்தோருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் குறித்த பெண் அலுவலருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## இலங்கைக்கு கிடைத்த மற்றொரு அதிர்ஷ்டம்

கொழும்பு, ஜூலை 31



இலங்கைக்கு உலகின் மிகப்பெரிய நட்சத்திர நீலக் கல்லொன்று கடந்த வாரம் கிடைக்கப்பெற்ற நிலையில், மீண்டும் 80 கிலோகிராம் நிறையுடைய நீல மாணிக்கக் கல்லொன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி இரக்குவானைப் பகுதியில் 80 கிலோகிராம் நிறையுடைய குறித்த நீல மாணிக்கக்கல், கொழும்பிலுள்ள வியாபாரி ஒருவரிடமிருந்து, பரிசோதனைக்காக தேசிய மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த மாணிக்கக் கல்லின் பெறுமதியை மதிப்பிட்ட பின்னர், எதிர்வரும் நவம்பர் மாதமளவில் சர்வதேச மாணிக்கக்கல் ஏலத்துக்கு விடப்படும் என்று தங்க ஆபரண அதிகாரசபை அதிகாரிகள் அதனை பெற்றுக்கொண்ட நபரிடம் உறுதியளித்துள்ளனர்.

கடந்த வாரம் 510 கிலோ கிராம் எடையுடைய உலகின் மிகப்பெரிய நட்சத்திர நீலக் கல் ஒன்று இரத்தினபுரி பகுதியில் கிணறு தோண்டியபோது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் கல் சர்வதேச சந்தையில் 100 மில்லியன் டொலர் விலை மதிப்புடையது என்று மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ.4)



## எரிகாயங்களுக்கு இலக்கான பெண் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜூலை 31

மட்டுவில் பகுதியில் மேலும் ஒரு பெண் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு மட்டுவில் கிழக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணே எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை தனக்குத்தானே தீமூட்டி எரிகாயங்களுக்கு இலக்கான மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 42 வயது குடும்பப் பெண் எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.பி.க்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்புகள் துஷ்பிரயோகம்

*சபாநாயகர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜுலை 31

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட பெரும்பாலான அதிகாரபூர்வ குடியிருப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ குடியிருப்புகளில் அவர்கள் இருக்க வில்லை எனவும், அவை வெளியாரினால் கையகப்பட்டிருக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ப.சி)

# தடுப்பூசியை பெற்றுக்கொள்ள மக்களை ஊக்குவிக்க வேண்டும்

*தென்மராட்சி செயலர் அறிவுறுத்து*

**சாவகச்சேரி, ஜுலை 31**



**தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் அனைத்து மக்களும் கொவிட்-19 தடுப்பூசி ஏற்றிக் கொள்ள பிரிவு கிராம அலுவலர்கள் ஊக்குவிக்க வேண்டுமென பிரதேச செயலர் கிராம அலுவலர்களுக்கு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.**

பிரதேசத்தில் நான்கு நிலையங்களில் நேற்றுமுன்தினம் முதல் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தடுப்பூசி ஏற்றுவதில் மக்கள் அக்கறையின்மையாக உள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தடுப்பூசி ஏற்றாதவர்கள் இருக்கக் கூடாது. என்பதால்கிராம அலுவலர்கள் தமது பிரிவில் மக்களை ஊக்குவிக்கும். நடவடிக்கைகளை மேற்கொண்டு தடுப்பூசி ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச செயலர் அறிவித்துள்ளார். பிரிவில் இதுவரை கொவிட் -19 முதலாம் கட்ட தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டோர், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் பணிபுரியும் 18 வயதுக்கு மேற்பட்டோர், 30 வயதுக்கு மேற்பட்டோர், கர்ப்பிணிகள், கல்விசார், கல்விசாரா பணியாளர்கள் அனைவரும் தடுப்பூசி ஏற்றுவதை ஊக்குவிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ப-9)

## சட்டவிரோத மணல் அகழ்வு பச்சிலைப்பள்ளியில் தாராளம்

*தவிசாளர் சுட்டிக்காட்டு*



கிளிநொச்சி, ஜுலை 31

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்க ளில் சட்ட விரோத மண் அகழ்வுகள் மிகவும் வேகமாக இடம்பெற்று வருகின்றன என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்:

பளை பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு மிக வேகமாக இடம்பெற்று வருகின்றது. அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மண் அகழ்வால் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். மிகவும் மோசமாக கிளாலி தொடங்கி இயக்கச்சி வரையில் அதிவேகமாக இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி டிப்பர் வாகனங்களில் மண் ஏற்றிச்செல்லப்படுகின்றது.

எமது பிரதேசமானது போரால் முற்றாக அழிக்கப்பட்ட பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற மக்கள் இயற்கையையே நம்பி வாழ்வாதாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சட்டவிரோத மண் அகழ்வால் பிரதேச மக்கள் ஒரு அச்ச நிலைக்குள் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். எமது பிரதேசத்தில் முழுமையாக வெடிபொருள்கள் அகற்றப்படவில்லை. இவ்வாறான இடங்களிலேயே சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகின்றது. எனவே மணல் அகழ்வில் ஈடுபட்டு வரும் சகோதரர்கள் எங்களுடன் இணைந்து உங்களுக்கான தொழில் முயற்சியை அடையாளப்படுத்துகின்ற போது உங்களுக்கான சகல ஒத்தாசைகளையும் நாம் வழங்குவோம் - என்றார். (ப-113)

## குறுகிய காலத்தில் அதிக தொற்றாளர்கள்

*சுகாதார அமைச்சு எச்சரிக்கை*



கொழும்பு,ஜுலை 31

இலங்கையில் குறுகிய காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தைக் கடந்துள்ளமை சிறந்த அறிகுறியல்ல என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை தொடர்ந்தும் பேணாவிடின், மீண்டும் கட்டுப்பாடுகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 3 லட்சத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 2 லட்சத்து 73 ஆயிரத்து 496 தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர். 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ.4)

## கோயிற்குடியிருப்பு மக்களுக்கு இன்றும், நாளையும் தடுப்பூசி



சாவகச்சேரி,ஜுலை 31

தென்மராட்சி கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான கொவிட்-19 தடுப்பூசி இன்றும், நாளையும் சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபத்தில் ஏற்றப்படவுள்ளது.

இதுவரை தடுப்பூசி ஏற்றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணிகள், 60 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் தனியார் நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் பணியாற்றும் 18 வயதுக்கு மேற்பட்டோர் ஆகியோருக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று கிராம அலுவலர் க.கார்த்திகேயன் அறிவித்துள்ளார். (ஐ-9)

## கட்டாக்காலிகளால் அழிவடையும் பயிர்கள்

*விவசாயிகள் கவலை*

காரைநகர்,ஜுலை 31

இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டு தற்போது அறுவடைக்கு தயாராகி வரும் நிலையில் பயிர்களை கட்டாக்காலி கால் நடைகள் அழித்து வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு பிரிவு கமக்கார அமைப்பால் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகளின் எண்ணிக்கை குறித்த பகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் வேர்வை சிந்தி உழைத்து அறுவடைக்கு தயாராகவுள்ள இந்த நிலையில் எமது பயிர்களை கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருகின்றன. எனவே இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ஐ-113)

# கட்டட விண்ணப்பங்களை சமர்ப்பித்து அனுமதி கிடைக்காதோர் நேரில் வரவும்

*சாவகச்சேரி தவிசாளர் தெரிவிப்பு*

சாவகச்சேரி, ஜுலை 31

சாவகச்சேரி நகரசபையில் கட்டட விண்ணப்பம் சமர்ப்பித்து இதுவரை அனுமதி கிடைக்காதவர்களை நேரில் வருமாறு தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

நாட்டு நிலைமை காரணமாக அனுமதி பெறாமல் கட்டட வேலைகளை ஆரம்பித்து நகரசபையின் வேண்டுகோளின் பிரகாரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்து இதுவரை அனுமதி கிடைக்காதவர்களும், முறைப்படி விண்ணப்பித்து இதுவரை அனுமதி கிடைக்காதவர்களும் விண்ணப்பம் வழங்கிய காலம் தொடர்பான விவரங்களுடன் வருகைதருமாறும் அறிவித்துள்ளார்.

கட்டட விண்ணப்பம் சமர்ப்பித்த பலருக்கு அவற்றில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக நகர சபையால் அனுப்பப்பட்ட கடிதங்கள் முகவரியில் குடியிருப்பாளர் இல்லை எனத் திரும்பியுள்ளன. விண்ணப்பத்தில் காணப்படும் குறைபாடுகளை சீர்செய்யும் நோக்குடனும், நகர அபிவிருத்தி அதிகார சபையால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள திருத்தங்களை நிவர்த்தி செய்யவும் விண்ணப்பதாரரின் வருகை அவசியம் என்பதால் கட்டடம் அமைப்பதற்குரிய விண்ணப்பம் சமர்ப்பித்து இதுவரை அனுமதி கிடைக்காதவர்களை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் வருகை தருமாறும் அறிவித்துள்ளார். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி ஹிஷாலினியின் சடலம் தோண்டியெடுப்பு

**கொழும்பு, ஜூலை 31**
**முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடைய இல்லத்தில் வீட்டு வேலைக் கமர்த்தப்பட்டு தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.**

இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட மருத்துவ குழுவினர் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா நீதவான் நீதிமன்றின் கண்காணிப்பின் கீழ் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைவாக, ஹிஷாலினியின் சடலம் இரண்டாவது தடவையாகவும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் நீதிமன்ற மருத்துவ அறிவியல் தொடர்பான பேராசிரியர் ஜீன் பெரேரா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் நீதிமன்ற மருத்துவ அறிவியல் பிரிவின் பிரதானி சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் சமீர குணவர்தன, பேராதனை போதனா மருத்துவமனையின் நீதிமன்ற மருத்துவ அறிவியல் தொடர்பான விசேட நீதிமன்ற மருத்துவ நிபுணர் பிரபாத் சேனசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஓ.4)

## நிரந்தர வீடுகளில் குடியேறத் தவறின் பிற பயனாளிகளுக்கு வழங்கப்படும்

*கரைச்சி பிரதேச செயலர் தெரிவிப்பு*

கிளிநொச்சி,ஜூலை 31
கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகளில் இன்றுவரை குடியேறாதவர்களின் வீடு மற்றும் காணி ஆகியவை பிற பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று பிரதேச செயலர் பா.ஜெயகரன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டின் பின்னர் நிரந்தர வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அவ்வீடுகளில் வசிக்காமல் பிற இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.இதனால் குறித்த வீடுகள் பராமரிப்பு இன்றி காணப்படுகின்றன.

இதன் காரணமாக குறித்த நிரந்தர வீடுகளில் குடியேறாதோர் இன்று (நேற்று) முதல் தமது வீடுகளில் குடியேற வேண்டும். தவறும் பட்சத்தில் குறித்த வீடு மற்றும் காணி ஆகியவை பிற பயனாளிக்கு மாற்றப்படும் - என்றார். (ஐ-13)






## தடுப்பூசி செலுத்தலில் இலங்கை முன்னிலை

*உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு*

கொழும்பு,ஜூலை 31
இலங்கையின் கொரோனாத் தொற்றுக்கான எதிர்ப்பு நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கை முழுவதிலும் நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் ஐந்து லட்சம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. ஒரே நாளில் ஐந்து லட்சம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியவை. இதற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (ஓ.4)





# போராடும் உறவுகளுடன் பேரம் பேசுகின்றன மன்னார் மனித உரிமை அமைப்புக்கள்

*உறவுகள் சங்கத் தலைவி குற்றச்சாட்டு*

மன்னார், ஜூலை 31
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி தொடர்பாக மனித உரிமை அமைப்புக்கள் எம்மோடு பேரம் பேசுகின்றன என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிந்து தருமாறு வலியுறுத்தி போராடும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த உறவுகளின் சங்கத் தலைவி மனுவேல் உதயச்சந்திரா குற்றச்சாட்டினார்.

ஆள்கடத்தலுக்கு எதிரான உலக தினத்தில் மன்னாரிலும் உறவுகளால் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. மன்னார் புதிய பஸ் நிலையம் அருகே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் தொடர்பாக உறவுகள் சங்கத் தலைவி மேலும் தெரிவிக்கையில்;

இறுதிப் பத்து நாள்களில் படையினரிடம் கைகளால் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு சர்வதேச விசாரணை ஒன்று மட்டுமே நல்லதொரு தீர்வாக அமையும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். ஆனால் இந்த சர்வதேசம் மௌனமாக இருக்கின்றது. ஏன் என்று எமக்கு தெரியவில்லை. சர்வதேசத்திடம் நாங்கள் கேட்கின்றோம் இலங்கை அரசை நாங்கள் நம்பவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு முடிவு என்ன? எமக்கும் வயதாகிக்கொண்டிருக்கிறது. எமது பிள்ளைகளுக்காக போராடுவதற்கு எமது உடம்பில் தெம்பு இல்லை. நாங்கள் தொலைத்தது ஆடு,மாடு, கோழிகளை அல்ல. நாங்கள் 10 மாதம் சுமந்து பெற்ற பிள்ளைகளை. அந்தப் பிள்ளைகளுக்காக இன்று நாங்கள் வீதியில் நின்று போராடிக்கொண்டிருக்கின்றோம். இதனை அனைத்து சர்வதேச அரசுகளும் கவனத்தில் எடுக்க வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து நாங்கள் போராடிக் கொண்டே இருப்போம் ஒவ்வொரு மாதமும் 30 ஆம் திகதி போராட்டம் தொடரும்.

எமது போராட்டம் ஆரம்பித்த இந்த நான்கு வருடங்களுக்குள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் தாய்மார்கள் 103 பேர் இறந்திருக்கிறார்கள்.

அதனால் சர்வதேசம் விரைவாக இந்த விடயத்தில் தலையிட்டு எமக்கான நீதியை வழங்க வேண்டும்.

அதே நேரத்தில் இங்கு உள்ள மனித உரிமை அமைப்புகள் எம்மோடு பேரம் பேசுவதில் ஈடுபட்டுள்ளன. அதாவது இலங்கை அரசோடு இணைந்து செயற்படுமாறு அவர்கள் வற்புறுத்துகிறார்கள். இந்தச் செயற்பாட்டை நாங்கள் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை- என்றார். (ப-213)

## தடுப்பூசியைப் பெற மக்கள் காத்திருப்பு

*உத்தியோகத்தர்களின் தாமதத்தால் இந்த நிலை*

கிளிநொச்சி, ஜூலை 31
கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும், மூன்றாவது நாளாக நேற்று தடுப்பூசி வழங்கப்பட்டு வரும் நிலையில் மக்கள் காலை 7 மணி முதல் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள நீண்டவரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தடுப்பூசி வழங்குவதற்கான அரச உத்தியோகத்தர்கள் காலை 9 மணிக்கு கூட வராததால் மக்கள் அதிக நெரிசலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கூலி வேலைக்குச் செல்பவர்கள் மற்றும் வர்த்தகர்கள் எனப் பலரும் காலையிலேயே ஊசியைப் பெற்றுக்கொண்டு தங்களுடைய வேலைகளுக்குச் செல்வதற்காக வந்தும், காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அத்தோடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரியநேரத்தில் வந்து தடுப்புசி ஏற்றும்பணியைச் சிறப்பாக நடத்தவேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டனர். (ப-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்கடத்தலுக்கு எதிரான உலக தினம்: முல்லையிலும் உறவுகள் கவனவீர்ப்பு





முல்லைத்தீவு, ஜூலை 31
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வலிறுத்தி போராடும் முல்லைத்தீவைச் சேர்ந்த உறவினர்கள் ஆள்கடத்தலுக்கு எதிரான உலக நாளான நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட் கொட்டிலுக்கு முன்பாக உள்ள முதன்மை வீதியில் பதாகைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க செயலாளர் தெரிவிக்கையில்;

உறவுகளைத் தேடிய போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. வட்டுவாகலிலும், ஓமந்தையிலும் எங்கள் உறவுகளை இராணுவத்திடம் கையளித்தோம் எங்கள் உறவுகளை மீட்டுதர இலங்கை அரசிடம் கேட்டு களைத்த நிலையில் இன்று சர்வதேசத்திடம் கேட்டு நிக்கின்றோம். இலங்கை அரசால் ஒரு போதும் நீதி கிடைக்கப்போவதில்லை. காலம் கடத்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமமாகும். எங்கள் உறவுகளைத் தேடிய 90க்கும் மேற்பட்ட பெற்றோர் இதுவரை மரணமடைந்துள்ளனர். பல அச்சுறுத்தலுக்கு மத்தியில் நோய்வாய்ப்பட்டு உயிரிழக்கின்றனர் எனினும் நாங்கள் போராடுகின்றோம். குழந்தைகளையும் பாடசாலை மாணவர்களையும் கையளித்தோம் அரசு மாறிமாறி வந்து தமிழருக்கு நீதி கிடைக்காமல் இழுத்தடிப்புச் செய்கின்றது. எமக்கான நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் - என்றனர். (ப-19)



## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

முல்லைத்தீவு, ஜூலை 31
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மதத் தலைவர்களுக்கான இடர் அபாய தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ரி.அகிலன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கின் வளவாளராக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் லிங்கேஸ்வரகுமார் கலந்துகொண்டார்.

வழிபாட்டு இடங்களில் மக்கள் அதிகமாக கூடுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன என உணரப்பட்டதால் மதத் தலைவர்களுக்கு இடர் அபாய தடுப்பு சார் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் குறித்த கருத்தரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டது. (ஐ-115)

# யாழில் நேற்றும் உறவுகள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

**காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிந்து தருமாறும், அவர்களுடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறும் தெரிவித்து, அவர்களுடைய உறவுகள் யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.**



யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்னால் நேற்று இந்த கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுடைய ஒளிப்படங்களை ஏந்தியவாறும், சுகாதார நடைமுறைகளைப் பேணியும் உறவுகள் கவனவீர்ப்பை முன்னெடுத்தனர். (ப-20)

# 40 கிலோ ஹெரோய்னுடன் சந்தேகநபரொருவர் கைது

கொழும்பு, ஜூலை 31
பண்டாரகம பிரதேசத்தில் 40 கிலோக் கிராமுக்கும் அதிக எடையுடைய ஹெரோய்ன் போதைப் பொருடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் போதைப் பொருளின் பெறுமதி 40 கோடி ரூபாவாகும் என்று பொலிஸ் ஊடப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து தப்பிச்சென்று டுபாயிலுள்ள போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடும் நபர், இதனுடன் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து களுத்துறை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாணைகள் ஆரம்பித்துள்ளனர். (ஒ.4)

# நாட்டின் சொத்துக்கள் அடுத்தடுத்து விற்பனை

## மயந்த எம்.பி.குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 31
நாட்டின் தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனைசெய்ய மாட்டோம் என்று கூறி ஆட்சிபீடமேறியவர்கள் இன்று நாட்டின் சொத்துக்களை அடுத்தடுத்து விற்பனைசெய்து கொண்டிருக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான அரசியல் பழிவாங்கல்களாக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பாக தற்போது துறைமுகத்துக்கு அண்மையிலுள்ள 13 ஏக்கர் நிலப்பரப்பை சீனாவுக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், மீளச்செலுத்தவேண்டிய கடன்களுக்கான நிதியைத் திரட்டிக்கொள்வதற்குமான அரசின் செயற்றிட்டங்கள் தொடர்பில் அடுத்த வாரம் நிதியமைச்சர் நாடாளுமன்றில் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார். (ஒ.4)

# சஜித்தின் அழைப்பை நிராகரித்தார் மங்கள

கொழும்பு, ஜூலை 31
ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்வது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை, முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர நிராகரித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்வதற்கு மங்கள சமரவீர ஆர்வம் கொண்டிருப்பாரேயானால், அது குறித்து கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் கலந்துரையாடத் தயார் என்று கட்சியின் செயற்குழு உறுப்பினர் ரெஹான் ஜயவிக்ரம தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் மங்கள சமரவீர, தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கப் பதிவில், ஐக்கிய மக்கள் சக்தியும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அக்கறை அவசியம்

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நீண்ட காலமாக முடக்கி வைக்கப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து நாளைமுதல் மீண்டும் ஆரம்பமாகின்றது. அரச அலுவலர்கள் யாவரும் நாளை மறுதினம் முதல் பணிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்க இதுவரை விடுக்கப்பட்ட அரச பணித்தொகுதிக்கான அத்தனை சுற்றறிக்கைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.ஒட்டு மொத்தத்தில் நாடு இயல்புக்குத் திரும்பும் அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால், இதுவொரு பேராபத்தான நிலை என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.


கிட்டத்தட்ட ஒரு மாதத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் மீண்டும் 2,000 கடந்தது கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை. நாடு மெல்லமெல்ல ஆபத்தான நிலைக்குள் செல்கின்றது என்றும் இவ்வாறு சென்றால் மீண்டும் தடைகள், கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் இறுக்கப்படலாம் என்றும் எச்சரித்தார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா.

கொழும்பு கொரோனா அபாய வலயமாக அறிவிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இன்றுவரை அந்த அறிவிப்பு நடைமுறையில் உள்ளது: அத்துடன் டெல்டா ஆபத்தான இடங்களிலும் கொழும்புக்கு கூடுதல் கவனிப்பு வழங்கப்படுகின்றது. ஆதலால் மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தளர்வு , மீண்டும் முழு அளவில் அரச பணியாளர்கள் அலுவலகங்களுக்குச் செல்லுதல் போன்றன டெல்டாவின் தீவிரப் பரவலுக்கு இன்னும் வசதியாகவே இருக்கப் போகின்றன.

ஊடகங்களும், சுகாதாரத்துறையினரும் தொடர்ச்சியாக இதைப்பற்றிய எச்சரிக்கைகளைச் செய்துகொண்டிருந்தாலும் மக்கள் பொறுப்புணர்ந்து நடக்கின்றார்களா என்று கேட்டால் அதற்கான பதில் நிச்சயம் திருப்திப்படும் வகையில் இருக்காது. இந்த அசண்டையீனம்தான் இன்று தனிநபர் பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் ஏழைகளின் வாழ்வாதாரத்தையும் இல்லாமல் ஆக்கியுள்ளது. அந்த மெத்தனப்போக்கு இனியும் தொடர்ந்தால் இன்னுமொரு முடக்கத்தை நாடு எதிர்கொள்ள வேண்டிவரும். அதன் தாக்கத்தை அரசால் எதிர்கொள்ள முடிகின்றதோ இல்லையோ நிச்சயம் எம்மவர்களால் எதிர்கொள்ள முடியாது.

ஆக, ஒருபுறம் கொரோனாக் கொத்தணி அதிகரிக்கும் நிலையில் மறுபுறம் வேறு வழியின்றி வேறு தெரிவின்றி நாடு மீளத் திறக்கப்படுகின்றது. நாடு திறக்கப்படுவதால், இயல்பு நிலைக்கு வலிந்து திருப்பப்படுவதால் எல்லாம் சரியாகிவிட்டது என்று அர்த்தமில்லை. ஏற்கனவே ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவுகள் காரணமாக மிகப்பெரும் சரிவை இலங்கை எதிர்கொண்டுள்ள நிலையில் அதிலிருந்து தப்பிக்க இந்தத் தளர்த்தல்கள் அவசியமாகின்றன. ஆனால் அந்தத் தளர்த்தல்களை அரசாங்கம் சரியான ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள, நாட்டை வலிந்து இயல்பு நிலைக்கு கொண்டு செல்வது கொரோனாவின் அடுத்த பேரலைக்கு வித்திடுவதாக மாறிவிடும். பொருளாதார நெருக்கடி என்ற சட்டிக்குள் இருந்து தப்பிப்பதாக நினைத்து , அரசாங்கம் இலங்கை மக்களை கொரோனாக் கொத்தணி, டெல்டா கொத்தணி என்ற எரியும் நெருப்புக்குள் விழ வைக்கப் போகின்றது.

எனினும் அரசாங்கத்துக்கு தான் இந்த மக்களின் உயிர் மீது அக்கறையில்லாவிடினும், சக மனிதர்கள் என்ற வகையில் நாம் அப்படி அக்கறையற்று இருக்க முடியாது. எம் தனிமனித செயற்பாடுகள்தான் கொரோனாவில் இருந்து எம் எழுச்சியையும் வீழ்ச்சியையும் தீர்மானிக்கப் போகின்றன. எனவே பயணத் தடைகள் விலக்கப்பட்டாலும், இயல்பு நிலைக்குள் வலிந்து நாடு செயற்கையாக கொண்டு வரப்பட்டாலும் நாம் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து மிகுந்த பொறுப்புணர்வுள்ளவர்களாக இருப்போம். சுகாதார நடைமுறைகளைச் சரிவரப் பேணி, நம்மையும், சூழலில் உள்ளோரையும் கொரோனாவின் பிடிக்குள் செல்லவிடாது காப்போம். அது ஒன்றேதான் இப்போது நமக்குள்ள ஒரேயொரு தெரிவு.




# இலங்கையை சர்வதேச நீதிமன்றில் முற்படுத்தினால் மாத்திரமே தீர்வு

## வவுனியா உறவுகள் நம்பிக்கை

**வவுனியா, ஜுலை 31**

**இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்துவதனூடாகவே எமக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.**



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

எமக்கு சர்வதேச நீதி கிடைப்பதற்காக நாம் போராடிவருகின்றோம். இன்று பல்வேறு அமைப்புகளையும், கட்சிகளையும் சார்ந்தவர்கள் சர்வதேச நீதி கிடைப்பதற்கு தடையாக இருந்து அரசைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு எம்மை அழைத்துச்செல்வதற்கான நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுவருகின்றனர். இத்தனை வருடங்களாக வெயிலிலும் மழையிலும் நாம் போராடிக்கொண்டிருந்தபோது அவர்களது அக்கறை எங்கே போனது. உள்ளூரில் போராடி எதனை நாம் பெற்றுக்கொண்டோம். ஆகவே இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்துவதன் மூலமே எமக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் கூறிக்கொள்கிறோம். இத்தனை வருடங்களாக நாம் போராடி வரும் நிலையில் எமக்கான நீதி கிடைப்பதற்கு எவரும் உறுதுணையாக இருந்ததில்லை. அந்த வலியை அனுபவிப்பவர்களால் மாத்திரமே உணர்ந்துகொள்ள முடியும்.

எமது போராட்டம் வியாபார நோக்கத்துக்கானதல்ல, சுயநலத்துக்கானதல்ல. எமது அன்பான உறவுகளின் உயிருடன் தொடர்புபட்டது.

எமக்கான நீதி விரைவில் கிடைக்கும் என்பதற்காகவே தொடர்ச்சியாகப் போராடுகிறோம். எமக்கு வாழ்வாதாரம் வழங்குவதற்கோ அரச தரப்பிடம் முற்படுத்துவதற்கோ யாரும் முயற்சி செய்யவேண்டாம் - என்றனர். (ப-110)

# இலங்கைக்கு தடை ஐ.நாவில் தீர்மானம்?

கொழும்பு,ஜுலை 31

இலங்கைக்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டும் என்று கோரி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆம் அமர்வுகளின்போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் உள்ளிட்ட ஐந்து நாடுகள் இந்தத் திட்டத்தை தீட்டியுள்ளன.

பிரிட்டன் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது என்று குறிப்பிட்டு சீனா முன்வைத்த தீர்மானத்துக்கு இலங்கை ஆதரவளித்த காரணத்தால், பிரிட்டன் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற முயற்சிக்கின்றது.

பிரிட்டன், மெசிடோனியா, கனடா, ஜெர்மனி மற்றும் மொன்டினிக்ரோ ஆகிய நாடுகள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற உத்தேசித்துள்ளன என்றும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டுக்குப் புலம்பெயர்ந்த

# தமிழர்கள் வாக்காளர்களாக பதிவதற்கு சந்தர்ப்பம் வேண்டும்

### தேர்தல் சட்ட மறுசீரமைப்பு குழுவிடம் கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 31**

**நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத 6 அரசியல் கட்சிகள், தேர்தல் சட்டத்தை மறுசீரமைப்பதற்கான நாடாளுமன்ற விசேட குழு முன்னிலையில் தமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளன. இதில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.**

தேர்தல் சட்ட மறுசீரமைப்புத் தொடர்பான குழு கடந்த புதன்கிழமை கூடியபோதே குறித்த குழு இவ்வாறு தனது நிலப்பாட்டை முன்வைத்துள்ளது. இங்கு தமது நிலைப்பாட்டை முன்வைத்த இலங்கை லிபரல் கட்சியின் செயலாளர் கமல் நிசங்க தெரிவிக்கையில்;

நியூசிலாந்தில் காணப்படும் தேர்தல் முறையைப் பயன்படுத்துவது பொருத்தமானது. எமது கட்சி மாவட்ட விகிதாசார முறைக்கு எதிர்ப்பானது இருந்தபோதும் தேசியப்பட்டியல் முறை அவ்வாறே பேணப்பட வேண்டும், நாடாளுமன்றத்துக்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்போது 160 பேரை தேர்தலின் மூலமும், 65 பேர் தேசிய பட்டியலின் ஊடாகவும் நியமிக்க வேண்டும் - என்றார்.

அகில இலங்கை தமிழர் மாகாண சபையின் தலைவர் கே.விக்னேஸ்வரன்; 30 வருடங்கள் நாட்டில் நிலவிய போரால் வெளிநாட்டுக்குச் சென்ற 1.5 மில்லியன் பேர் தமது வாக்குகளை அளிப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்காக சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இது காலத்துக்குத் தேவையான விடயம் - என்றார்.

பெண் பிரதிநிதித்துவத்தை 30 வீதமாக உயர்த்த வேண்டும் என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, தமது நிலைப்பாட்டை குழு முன்னிலையில் தெரிவித்தது.

இது நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலும் பேணப்பட வேண்டும் என்றும் அக்கட்சி குறிப்பிட்டது. தற்பொழுது நடைமுறையில் உள்ள விகிதாசார முறை எந்தவித மாற்றமும் இன்றி தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

இந்த முறையின் கீழ் சகல இனங்களுக்கும் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. ஜனநாயகத்துக்கு இது மிகவும் முக்கியமானது. உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று சமத்துவக் கட்சி சுட்டிக்காட்டியது.

இதன் போது தேர்தல்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்ற விசேட குழுவில் தெரிவித்தார். விருப்பு வாக்குமுறையுடன் பெண்கள் போட்டியிடுவது சிரமமானது என்றும், குடும்பப் பின்னணியின் ஊடாகவே பெண்கள் பெரும்பாலும் அரசியலுக்குள் நுழைகின்றார்கள் என்றும், அவ்வாறு இல்லாவிட்டால் நாடாளுமன்றத்துக்குள் நுழைவது சிரமமானது என்றும் அவர் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். (ப)

## மக்களுக்காக குரல் கொடுப்பதாலேயே கூட்டமைப்பை பழிவாங்குகிறதாம் அரசு

அம்பாறை, ஜூலை 31

இந்த நாட்டின் ஜனநாயகம், சிறுபான்மைச் சமூகங்களின் உரிமை சார்ந்த விடயங்களிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடுதலாகக் குரல் கொடுப்பதால் எங்களைப் பழிவாங்குகின்ற அல்லது மக்கள் மத்தியில் இருந்து முற்றாக வெளியேற்றக் கூடிய செயற்பாடுகளை இந்த அரசு முழு மூச்சாகச் செய்து வருகின்றது என கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது அரசியல் ரீதியான செயற்பாடுகளைப் பார்க்கின்றபோது எங்களுக்கு வருடாந்தம் வழங்கக்கூடிய பாதீட்டு நிதியைத் தவிர அரசால் வேறு எந்த நிதி மூலங்களும் வழங்கக் கூடிய வாய்ப்புகள் இல்லை. இந்த நாட்டின் ஜனநாயகம், சிறுபான்மை சமூகங்களின் உரிமை சார்ந்த விடயங்களிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடுதலாகக் குரல் கொடுப்பதால் எங்களைப் பழிவாங்குகின்ற அல்லது மக்கள் மத்தியில் இருந்து முற்றாக வெளியேற்றக்கூடிய செயற்பாடுகளை இந்த அரசு முழுமூச்சாகச் செய்து வருகின்றது.

அந்த அடிப்படையில் நாங்கள் பல சவால்களுக்கு முகங்கொடுத்தே எமது மக்களுக்கான அரசியலைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது சமூகம் சார்ந்து நாங்கள் பல முன்மொழிவுகளை முன்வைத்திருந்தாலும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அரசோடு இணைந்து பயணத்த காலங்கள் மிக அரிதானவையாகும். உரிமை சார்ந்த விடயங்களை நாங்கள் பேசுவதால் அரசியலில் நாங்கள் ஆளுந்தரப்பாக இருக்கவில்லை. அந்த வகையில் எமது உரிமை சார்ந்து நாங்கள் போராடுவதால் எமக்கு சவால்மிக்க விடயங்கள் அதிகம் உண்டு.

ஆளுந்தரப்புடன் சென்ற பல அரசியல்வாதிகள் இன்று படுகின்ற அவஸ்தையை நாங்கள் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த நாட்டில் சமாதானம், ஏனைய சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம், சமத்துவம் பேணப்பட வேண்டும் என்ற அடிப்படையில் செயற்படுகின்றோம். அந்த அடிப்படையோடு எமது மக்களையும் அணிதிரட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம் - என்றார். (ப)



## புங்குடுதீவில் உள்ள கிணறுகள் துப்புரவு

புங்குடுதீவு,ஜூலை 31

பொதுமக்களின் நலன் கருதி புங்குடுதீவு பிரதேசத்தில் உள்ள மூன்று பொதுக்கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டன.

சூழகம் அமைப்பின் செயலர் கருணாகரன் நாவலனின் 20 ஆயிரம் ரூபா நிதியுதவியில், புங்குடுதீவு சென்சேவியர் கடற்தொழிலாளர் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்பில் இந்தக் கிணறுகள் சுத்தம்செய்யப்பட்டன.

புங்குடுதீவு கண்ணகை அம்மன் கடற்கரையில் காணப்படுகின்ற நன்னீர்க் கிணறு மற்றும் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கின் முன்பாகக் காணப்படுகின்ற இரு நன்னீர் கிணறுகள் ஆகியவையே சுத்தம் செய்யப்பட்டன. இச் செயற்பாடுகளில் சூழலியல் மேம்பாட்டு அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர்களான கருணாகரன் குணாளன், சண்முகராஜா தரங்கன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)



## வீராப்பு வசனங்களைப் பேசி தமிழ், முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க முயற்சிக்க வேண்டாம்

மட்டக்களப்பு, ஜூலை 31

சிறுமி ஹிஷாலினிக்கு நீதி கிடைக்க வேண்டும். ஆனால், சமூக ஊடகங்களில் வீராப்பு வசனங்களைப் பேசி தமிழ், முஸ்லிம் என்னும் தமிழ் பேசும் உறவை சீர்குலைக்க முயற்சிக்காதீர்கள் என ஜனனம் அறக்கட்டளையின் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான கலாநிதி. வினாயகமூர்த்தி ஜனகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

சிறுமி ஹிஷாலினிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் நூறுவீதம் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. அது அரசியல் கடந்த ஒரு நீதி சார்ந்த விடயம். அதற்காக வேண்டி என்னுடைய ஜனனம் அறக்கட்டளை ஊடாக சிறுமியின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டுமான உதவிகளை ஜனநாயக அடிப்படையில் மேற்கொள்ளவும் நாங்கள் தயாராக உள்ளோம். ஆனால், தற்போது பார்க்கப்போனால் சமூக வலைதளங்களைத் திறந்தாலே இச்சிறுமியின் விவகாரத்தை வைத்து இரு தரப்பினரும் மாறி மாறி அரசியல் செய்வதை தெளிவாக காணக்கூடியதாக இருக்கின்றது. இலங்கைத் திருநாட்டை பொறுத்தமட்டில் மதங்களால் தமிழ், முஸ்லிம் என்று வேறுபட்டாலும் மொழியால் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றாகப் பிணைந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. இரு சமூகங்களுக்கிடையில் பெரும் தொப்புள்கொடி உறவு இருக்கிறது. இந்த விவகாரத்தை வைத்து சமூக ஊடகங்களில் தனிப்பட்ட காரணங்களுக்காக இதை அரசியல் மயமாக்கி தமிழ், முஸ்லிம் உறவை சீர்குலைக்க தயவுசெய்து முயற்சிக்க வேண்டாம் என்று சமூக ஊடகங்களில் வீராப்பு வசனம் பேசிக்கொள்பவர்களிடம் மிகப் பணிவாக வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சிறுமியின் விவகாரமானது தமிழ், முஸ்லிம், சிங்களம் என்பதைத் தாண்டி அப்பாவி சிறுமிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாங்களும் நீங்களும் குரல் கொடுக்க வேண்டுமே தவிர, தனிப்பட்ட அபிலாஷைகளுக்காகவும், அரசியல் நோக்கங்களுக்காகவும் உங்கள் குரல்களை சமூக ஊடகங்களில் எழுப்புவதை சற்று சிந்தித்து செயற்படுங்கள். இவ்வாறான ஒரு செயற்பாடு தொடர்ந்து சென்றால் தமிழ், முஸ்லிம் உறவுகளுக்கு இடையிலே அதிக விரிசலை ஏற்படுத்தும் என்ற சந்தேகம் ஒன்று என்னுள் தோன்றுகிறது. இந்தச் சிறுமி மாத்திரமல்ல, இனிவரும் காலங்களில் எந்தச் சிறுமிக்கும் இவ்வாறான நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக, நாங்கள் இனம், மதம் கடந்து ஒன்றுசேர வேண்டும் என்பதை உங்களிடம் கூறிக்கொள்ள விரும்புகிறேன்- என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரிஷாத்தின் கட்சி அரசுக்கே ஆதரவு

## மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 31**



**தற்போதைய சமகால அரசியல் நிலைவரங்களுக்கேற்ப ஐக்கிய மக்கள் சக்தியால் அமைக்கப்படும் கூட்டணியில் ரிஷாத் பதியுதீனின் கட்சி அங்கம் வகிக்காது. அவரது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிட்டவர்கள் தற்போது அரசுடன் மிகவும் நெருங்கிச் செயற்பட்டு வருகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ரிஷாத் பதியுதீன் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அல்ல. அவர் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியின் தலைவராவார். தேர்தலின்போது அவருடைய கட்சி எமது கட்சியுடன் கூட்டிணைந்து போட்டியிட்டது.

ஆனால் அவர்கள் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசுக்குப் பெற்றுக்கொடுத்தனர். அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிகொள்வதற்கும் உதவினர். எனவே ரிஷாத் பதியுதீன் எமது தரப்பைச் சேர்ந்தவரல்ல.

அதேவேளை சிறுவர்கள் மீதான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே ஐக்கிய மக்கள் சக்தி கொண்டிருக்கின்றது.

எனவே ஹிஷாலினி என்ற சிறுமியின் உயிரிழப்பு விவகாரம் தொடர்பில் அநாவசியமான ஊடகக் கண்காட்சிகளை நடத்தாமல், உரியவாறு விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம்.

இந்த விடயத்தில் ரிஷாத் ஆளுங்கட்சியில் இருக்கின்றாரா? எதிர்க்கட்சியில் இருக்கின்றாரா? என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. மாறாக முறையாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதே அவசியமாகும் - என்றார். (ஒ.4)

*மேல் மாகாணத்தை மையமாகக்கொண்டு*

# நகர அழகுபடுத்தல் வேலைத்திட்டம்

கொழும்பு, ஜூலை 31

மேல் மாகாணத்தை மையமாகக்கொண்டு, நகர அழகுபடுத்தல் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி அலுவலகத்தின் விசேட பணிகள், சுற்றாடல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

முதல் கட்டமாக, கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு நகர அழகுபடுத்தல், வீதித் துப்புரவு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக, களனி பொலிஸ் பிரிவில் சுத்திகரிப்புப் பணிகளை ஆரம்பிப்பது குறித்த முதற்கட்ட கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தின் விசேட பணிகள், சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் ரொஷான் ராஜபக்ச மற்றும் களனித் தொகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொஷான் டயஸ் ஆகியோரின் தலைமையில் கடந்த புதன்கிழமை பேலியகொட பீபல்ஸ் தேவாலய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை ஆகிய நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்த கலந்துரையாடலில் பங்கு பற்றினர். களனி கங்மிடியாவத்தைக்குச் சொந்தமான தாழ் நிலங்களில் வெள்ள நிலைமைகளைக் கட்டுப்படுத்தல், பேலியகொட, கிரிபத்கொட, கடவத்தை பொலிஸ் பிரிவுகளுக்கு சொந்தமான கொழும்பு - கண்டி பிரதான வீதியில் சுத்திகரிப்பு, சுற்றாடல் அழகுக்குத்

தடையாகவுள்ள விளம்பரப் பலகைகள் குறித்து கவனம் செலுத்துதல், நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் பங்களிப்புடன் பொலிஸாரின் கண்காணிப்புடன் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் என்பவை எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

# குடிதண்ணீர் திட்டம் முல்லையில் இழுபறி

முல்லைத்தீவு, ஜூலை 31

முல்லைத்தீவு நகருக்கான குடிதண்ணீர்த் திட்டம் கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக இழுபறி நிலையிலேயே காணப்படுகின்றது. வற்றாப்பளை கிராம அலுவலர் பிரிவில் உள்ள பெரும் பீலிப் பகுதியில் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிதண்ணீர் வழங்கலை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் வேலைத்திட்டங்கள் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தண்ணீர் வழங்கலை மேற்கொள்கின்றபோது திறந்த கிணறுகளின் நீர் மட்டம் அடிநிலையைச் சென்றடைவதால் இத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவட்டச் செயலகத்திலும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக் கூட்டங்களில் கரைதுறைபற்றின் மணவாளன் பட்டமுறிப்புக் குளத்தில் இருந்து அல்லது வற்றாப்பளை ஊடாக நந்திக் கடல் வழியாக கடலைச் சென்றடையும் நீரைச் சேமித்து குடிதண்ணீராக வழங்குவதற்கான திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன. ஆனால் தற்போதும் முல்லைத்தீவு நகரத்தின் பல வீதிகளில் குழாய்கள் பொருத்துவதற்கு வெட்டப்பட்ட குழிகள் காரணமாகவே விபத்துகள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படும் நிலையில் இறுதியாக நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்வில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு கடிதங்கள் அனுப்புவது என்றும் குடிதண்ணீர்த் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்தாவிட்டால் குழாய்கள் பொருத்துவதற்கு வெட்டப்பட்ட குழிகளை மூடவேண்டும் என்றும் மக்கள் கோரியுள்ளனர். (ப-13)

# தமிழர்கள் பிரச்சினைகளை கவனத்தில் எடுக்க வேண்டும்

## பிரித்தானியாவிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 31

தமிழ் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை பிரித்தானிய அரசு உடனடி கவனத்தில் கொள்வதோடு உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தியா மற்றும் இந்தியப் பெருங்கடல் உதவி இயக்குநராக நியமிக்கப்பட்ட லிஷா பண்டாரியிடம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதில் குறிப்பாக தமிழ் மக்கள் நீண்டகாலமாக கோரிவரும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை எமது பாரம்பரிய தாயகமாக அங்கீகரிக்கும் அரசியல் தீர்வை அடைய தமிழ் சமூகத்துக்கு சர்வதேச மத்தியஸ்தத்தின் மூலம் உதவுதல். அரசியல் தீர்வை எட்டும் வரை நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரப் பகிர்வுடன் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை யூ.என்.எச்.சி.ஆர் தீர்மானம் 46/1 இல் பிரேரிக்கப்பட்டதன் பிரகாரம் முழு அளவில் செயற்படுத்துதல். இதன் அடிப்படையில் மாகாண சபை தேர்தல்களை தாமதமின்றி நடத்த இலங்கை அரசை வலியுறுத்துதல், இலங்கை சிறைகளில் காலவரையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பு வழங்கி விடுவித்தல், இலங்கை அரசின் இனப்படுகொலை உள்ளிட்ட அட்டூழிய குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மனித உரிமைகள் பேரவையிலும் அதைத் தாண்டியும் செயற்படுத்தல், பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தமிழரின் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழ் மக்களின் இனக் குடிப் பரம்பலை சிதைப்பதன் மூலம் தங்கள் சொந்த நிலத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் திட்டமிட்ட இனவழிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துதல் என்பவை உடனடியாக கையாளப்பட வேண்டிய விடயங்களாக சுட்டிக் காட்டப்பட்டன.

இதன்போது தமிழ் மக்களின் மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் அரசியல் சமத்துவம், கௌரவமான வாழ்வு என்பவற்றை உறுதிசெய்யும் அனைத்து நடவடிக்கைகளையும் பிரித்தானியா விரைந்து செயற்படுத்தும் என புதிய உதவி இயக்குநரான லிஷா பண்டாரி உறுதியளித்துள்ளார். (ப)



# சுயதொழில் விருத்தி தொடர்பான செயலமர்வு

திருமலை, ஜூலை 31

பெண்கள் சுயதொழில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலான முழுநாள் செயலமர்வொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. குறித்த செயலமர்வானது மகளிர் விவகார வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டில் பிரதேச பெண்கள் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கடன் திட்டங்களை மேற்கொண்டு சுயதொழில் முயற்சியாளர்களை விருத்திசெய்தல் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக அமையப்பெற்றது.

இதில் சுயதொழில் விருத்தி, சந்தைப்படுத்தல், உற்பத்தி திறன்களை வளர்த்தல், கணக்கு நடவடிக்கைகள் போன்ற பல விடயங்களை இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை பிரதேச முகாமையாளர் மைக்கல் நிரோசன் வளவாளராக கலந்துகொண்டு முன்வைத்தார். குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.புரபானந்தன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி, பெண்கள் வெளிக்கள உத்தியோகத்தர் எம்.ஏ.நஸ்ரின் டிலானி உட்பட பெண்கள் சுய தொழிலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து நாளை ஆரம்பம்

**கொழும்பு,ஜூலை 31**
**கொரோனாத் தொற்றால் தடைப்பட்டிருந்த மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.**



அதற்கமைவாக தனியார் மற்றும் அரச பஸ் சேவைகளை, மாகாணங்களுக்கு இடையே மீண்டும் நடத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். அலுவலக சேவை நேரங்களில் மாத்திரம் இந்த பஸ் போக்குவரத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை பல்வேறு நிபந்தனைகளும் விதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)




## எம்.பிக்களுக்கு அன்டிஜென் பரிசோதனை

கொழும்பு.ஜூலை 31
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 3 ஆம் திகதி அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படும். விருப்பமானவர்கள் மாத்திரம் இதில் கலந்துகொள்ளலாம் என்று நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
அன்டிஜென் பரிசோதனை நாடாளுமன்ற வளாகத்தில் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது.
இந்தப் பரிசோதனைக்கு 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே ஒத்துழைப்பு வழங்கினர்.
எதிர்வரும் 3ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுகின்ற நிலையில், அந்தச் சந்தர்ப்பத்தில் உறுப்பினர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரைத் தவிர ஏனைய அனைவரும் கொரோனாத் தடுப்பூசி பெற்றுள்ளனர்.
15 க்கும் மேற்பட்டவர்கள் இதுவரை தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

## பொதுப் போக்குவரத்தில் சுய பாதுகாப்பு அவசியம்

*தடுப்பூசி அவசியமென அறிவிக்கவில்லை என்கின்றது போக்குவரத்து திணைக்களம்*

கொழும்பு.ஜூலை 31
கொரோனாத் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரம் தான் பொதுப்போக்குவரத்துக்களில் பயணம்செய்ய முடியும் என்று போக்குவரத்துத் திணைக்களம் இதுவரையில் அறிவிக்கவில்லை.
எனினும் பொதுமக்கள் தங்களின் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம் என்று போக்குவரத்துத் திணைக்கள பிரதி பொது முகாமையாளர் எ.எச் பண்டுக தெரித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொதுமக்களின் சுய பாதுகாப்புக்காக சுகாதாரத் தரப்பினர் தொடர்ந்து வழிநடத்துவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது. தற்போதைய சூழ்நிலையில் பெரும்பாலான மக்கள் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர்.
பொதுப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்தும் பயணிகள் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமல் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதைக் காணமுடிகின்றது. ஒரு சிலரது பொறுப்பற்ற செயற்பாடுகளால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்படுவர்- என்றார். (ஒ,4)

## டெங்குத் தொற்றை பரப்பும் 4 வைரஸ்க்கள் அடையாளம்

கொழும்பு.ஜூலை 31
டெங்குத் தொற்றைப் பரப்பும் 4 வகையான வைரஸ்க்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 2, 3 ஆம் வகையைச் சேர்ந்த வைரஸ்க்களே நாட்டில் அதிகளவில் பரவியுள்ளன என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் தேசிய டெங்கு நோய் ஒழிப்பு பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
இந்த வருடத்தில் ஜூன் மாதம் 2 ஆயிரத்து 997 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த மாதம் 3 ஆயிரத்து 29 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.
நாடளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்குத் தொற்றாளர்களில் 70 வீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.
தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு, மருத்துவ ஆய்வுகூடம், சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் டெங்கு நோய்ப் பிரிவு ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களுக்கமைய, டெங்குத் தொற்றைப் பரப்பும் 4 வகையான வைரஸ்க்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 2, 3 ஆம் வகையைச் சேர்ந்த வைரஸ்க்களே நாட்டில் அதிகளவில் பரவியுள்ளன.
பல வருடங்கள் இடைவெளிக்குப் பின்னர் முதலாம் வகையைச் சேர்ந்த வைஸின் தாக்கமும் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
இந்த வைரஸ்களின் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படும் போது தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றன. என்றுள்ளது. (ஒ,4)

## முதலீட்டாளர்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு.ஜூலை 31
இலங்கையில் கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள முதலீட்டாளர்க ளுக்கு அமெரிக்கா மறைமுக எச்சரிக்கையை விடுத்துள் ளது. இது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி. டெப்லிட்ஸ் தெரிவிக்கையில்,
கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தில், அமெரிக்க நிறுவனங்களின் முதலீட்டை தடைசெய்யப்போவதில்லை.
எவ்வாறாயினும், கொழும்பு துறைமுக நகர சட்டம் மற்றும் அதிலுள்ள குறைபாடுகள் குறித்து சில கரிசனைகள் காணப்படுகின்றன. கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒரு சீன நிறுவனம்மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. , அந்த நிறுவனத்துடன் வர்த்தகத்தில் ஈடுபடுவது சரியான விடயமாக அமையாது.
கொழும்பு துறைமுக நகரத்தில் வர்த்தகம் செய்வதற்கான விதிமுறைகள் குறித்து நிறுவனங்கள் அவதானம் செலுத்த வேண்டும். கொழும்பு துறைமுக நகரச் சட்டத்தின் சில அம்சங்கள் குறித்து நாம் தொடர்ந்தும் கரிசனைகொண்டுள்ளோம். ஊழல் செல்வாக்குகள், சட்டவிரோத பணப்பரிமாற்றம் போன்றவற்றில் ஈடுபடத்தூண்டும் பலவீனமான அம்சங்கள் அதில் காணப்படுகின்றன.
அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்வதை அமெரிக்கா தடுக்கவில்லை. எனினும் அமெரிக்க நிறுவனங்களுக்கு மாத்திரமல்லாமல் எந்தவொரு நிறுவனத்துக்குமான முதலீட்டுச் சூழல் குறித்து தொடர்ந்தும் கரிசனைகொண்டுள்ளோம்- என்றார். (ஒ,4)

## முடிந்தால் மோதிப்பாருங்கள்

*ஹரின் பகிரங்க அழைப்பு*



கொழும்பு.ஜூலை 31
உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில், பகிரங்க விவாதத்தில் ஈடுபடுவதற்கும் தயார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அழைப்பு விடுத்துள்ளார். நான் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பகிரங்கமாகப் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றேன். அமைச்சர் சரத் வீரசேகரவும் இதற்குத் தயாராகி எவரை வேண்டுமானாலும் துணைக்கு அழைத்துவந்து என்னுடன் விவாதத்தில் ஈடுபடலாம். குற்ற விசாரணைப் பிரிவினர் சுமார் 5 மணித்தியாலங்கள் என்னிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர். சில அரசியல்வாதிகள் பதவியைப் பெற்றவுடன் பழைய விடயங்களை நினைவில்கொள்வதில்லை. அமைச்சர் சரத் வீரசேகர என்னைப்பற்றி நாடாளுமன்றத்தில் பல விடயங்களைத் தெரிவித்துள்ளார்.
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில், ஊடகங்களில் என்னுடன் நேரடி விவாதத்தில் ஈடுபட அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு அழைப்பு விடுக்கின்றேன். என்னை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சிரமப்படுத்துவதை விட இதனுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளை இனங்காண்பதே முக்கியத்துவமுடையதாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வயதுக்குக் குறைந்தோரை தொழிலுக்கு அமர்த்த முடியாது

## 3 மாதங்களில் வருகின்றது சட்டம்

**கொழும்பு,ஜூலை 31**



**இலங்கையில் 18 வயதுக்குக் குறைவானவர்களை தொழிலுக்கு அமர்த்துவதைத் தடுக்கும் வகையிலான சட்டம் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளோம் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த 16 வயதுச் சிறுமி உயிரிழந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நாட்டின் தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொழிலில் ஈடுபடுவதற்கான ஆகக் குறைந்த வயது எல்லை 14 இலிருந்து 16ஆக மாற்றியமைக்கப்பட்டது. மகளிர், இளைஞர் மற்றும் சிறுவர் தொழிலாளர் சட்டத்தின் கீழ், அபாயகரமான தொழில் விதிமுறைகளைத் திருத்துவதற்கான இறுதி வரைவும் ஏற்கனவே அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரு குடும்பம் பெண்ணைப் பணிக்கு அமர்த்தினால், தனிநபரின் விபரங்கள் மாவட்ட தொழிலாளர் அதிகாரியுடன் பகிரப்பட வேண்டும். முதலாளிகள் தேசிய குறைந்த பட்ச ஊதியத்துக்கு இணங்க வேண்டும்.

அதேவேளை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் ஊடாக வீட்டுப் பணிப்பெண்கள் பயனடையும் வகையில், முக்கிய சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் ஆரோக்கியமான பணிச்சூழலை உறுதிசெய்வதில் சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான பல முக்கிய திட்டங்கள் மற்றும் உள்நாட்டு வீட்டுப் பணிப் பெண்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம் - என்றார். (ஒ.4)

## கம்மன்பிலவுக்கு எதிரான வழக்கு செப்ரெம்பரில் விசாரணைக்கு

கொழும்பு,ஜூலை 31

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கொன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதனால் முறைப்பாட்டாளர் தரப்பில் சாட்சியம் பதிவு செய்வதற்காக ஆஸ்திரேலிய பிரஜைகள் மூன்று பேருக்கு, அறிவித்தல் அனுப்புமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சினூடாக இந்த அறிவித்தலை அனுப்புமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அமல்ரணராஜா உத்தரவிட்டுள்ளார்.

போலி ஆவணத்தைப் பயன்படுத்தி, ஆஸ்திரேலிய பிரஜைகளுக்கு சொந்தமான நிறுவனத்தின் பங்குகளை விற்பனைசெய்து, 20 மில்லியன் ரூபா மோசடி செய்தமை தொடர்பில் உதய கம்மன்பிலவுக்கு எதிராக சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அரச சிரேஷ்ட சட்டத்தரணி யுவான் அபேவிக்ரம முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை சாட்சி விசாரணைகளை ஒத்திவைத்துள்ளார். (ஒ.4)

## மிகப்பெரிய இரத்தினக்கல் சீனாவில் ஏல விற்பனை

கொழும்பு,ஜூலை 31

இலங்கையின் இரத்தினபுரி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய இரத்தினக்கல், சீனாவில் ஏல விற்பனைசெய்யப்படும் என்று இரத்தினக்கல் மற்றும் இரத்தினக்கல் சார்ந்த தொழில்துறை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

சீனாவின் இரத்தினக்கல் ஏலம் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளது. குறித்த இரத்தினக்கல்லை அந்த ஏலத்தில் விற்பனை செய்ய எதிர்பார்த்துள்ளோம். உரிமையாளரின் விருப்பத்துடனேயே சர்வதேச ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இரத்தினக்கல்லுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இரத்தினக்கல்லை ஏலத்தில் விற்பனைசெய்வதற்கு முன்னர், அதன் பெறுமதியைக் கணிப்பிட வேண்டும்.

இந்த இரத்தினக்கல் விற்பனைசெய்யப்படும் தொகையில், 10 வீதம் அரசுக்கு உரித்தாகும். நாட்டில் நிதி தொடர்பான பிரச்சினை காணப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வாறான கல் ஒன்று கிடைக்கின்றமை அதிஷ்டமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## அஜித் ரோஹணவுக்கு மீண்டும் புதிய பதவி

கொழும்பு,ஜூலை 31



பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹணவுக்கு மீண்டும் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர்கள் சபை உறுப்பினராக, அஜித் ரோஹண நியமிக்கப்பட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த பதவி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவி எதிர்வரும் 3 வருடங்களுக்கு நீடிக்கும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஒ.4)



## கொரோனா தடுப்பூசியை நிராகரிக்கும் கர்ப்பிணிகள்

கொழும்பு,ஜூலை 31

கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு கர்ப்பிணிகள் நாட்டம் கொள்ளவில்லை என்று மகப்பேறியல் மற்றும் பெண்நோயியல் நிபுணர் மருத்துவர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதால் எவ்வித ஆபத்தும் இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டிருந்தாலும், தடுப்பூசி பெற்றுக்கொள்ள இவர்கள் தயக்கம் காட்டுவது கவலையளிக்கின்றது.

கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி செலுத்துவதில் இதுவரை எந்தப் பிரச்சினையும் இல்லை. அத்துடன் தடுப்பூசி செலுத்துவதில் கர்ப்பிணிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

எனவே கர்ப்பிணிகள் தடுப்பூசியை அருகிலுள்ள மருத்துவமனை அல்லது மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இந்த நேரத்தில் தடுப்பூசியைச் செலுத்துவது பாதுகாப்பான முடிவு என்றும் - அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# ரிஷாத் வீட்டில் பெண்களுக்கு நடந்த கொடுமைகள் அம்பலம்

## மற்றொரு பெண் வாக்குமூலம்

கொழும்பு,ஜூலை 31

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றியபோது, அவரது மனைவி செய்த கொடுமைகளை பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய ஒருவரே, பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பிரபல சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ரிஷாதின் மனைவி மாத்திரமன்றி, அவரது உறவினர்களும் வீட்டுப் பணிப் பெண்களுக்கு பெரும் துன்புறுத்தல்களைச் செய்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் வீட்டிலுள்ள விளக்குமாறு உடையும் வரை, பணிப் பெண்கள்மீது தாக்குதலும் நடத்தப் பட்டுள்ளது.

வீட்டிலுள்ள மலசலகூடத்தை சரியாக சுத்தம்செய்யாத பட்சத்தில், அவரது மனைவி தமது முகத்தை மலசலகூட கொமட்டில் வைத்து, அசுத்தமான நீரை தம்மீது திறந்து விடுவார் என்று பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

ரிஷாதின் வீட்டில் பணிபுரிந்த 11 பேரில், 3 பேர் மர்மமான முறையில் உயிரிழந்திருந்தனர். ஒருவர் பம்பலப்பிட்டி ரயில் தண்டவாளத்தில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார். மற்றொரு பெண் நோய்க்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். அத்துடன், ஹிஷாலினி தீக்காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, ரிஷாத் வீட்டில் பணிபுரிந்த அனைத்து பெண்களிடமும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** பணத்தேவை கடைசி நேரத்தில் நிறைவேறும். சுபசெய்தி வரும். பணவரவு ஓரளவே இருக்கும். பிரச்சினை தீரும். உறவினர் உதவுவர். குடும்பத்தி னரின் ஆதரவு உண்டு. தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்:** மன நிறைவு காண்பீர்கள். எடுத்த வேலைகள் எளிதில் முடிப் பீர்கள். உடன்பிறந்தவர்களிடம் எதிர் பார்த்த உதவி ஓரளவே கிடைக்கும். கூட்டுமுயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:** விரயம் கூடும். முன்யோச னையுடன் பேசுவது நன்மையளிக்கும். எதிரிகள் பலமிழப்பர். செல்வ வளமும் நன்மையும் கூடுதலாகும். எதிர்பார்த்த நன்மைகள் நடைபெறும்.

**கடகம்:** சந்தோஷமான நாள். ஆனால் அதிக அலைச்சல் உண்டு. உடல் நலனில் அதிருப்தி ஏற்பட்டு மறையும். வீண் பயம் தீரும். உறவினர் ஒருவர் பற்றிய கவலை அளிக்கும் செய்தி வரலாம்.

**சிம்மம்:** தேக ஆரோக்கியம் தெளிவு பெறும். வியாபார அபிவிருத்தி உண்டு. சிந்தித்து செயற்பட வேண்டிய நாள். சிறு பிரச்னை ஒன்று ஏற்படலாம். குடும்பத்தில் வெளியாட்களால் பிரச்சினை ஏற்படலாம்.

**கன்னி:** மறதியால் சிறு சிறு பிரச்சினை களுக்கு ஆளாக நேரிடும். மற்றவர்க ளின் விமர்சனங்களை மறந்து செயல்படுவது நல்லது. நினைத்ததை முடித்து நிம்மதி காண்பீர்கள்.

**துலாம்:** பூமிவகையில் எதிர்பார்த்த லாபம் கிட்டும். கவலை நீங்கும். பொரு ளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பாதிப்பு மெல்லக் குறையும். சேமிப்பை உயர்த்தும் எண்ணம் கூடும்.

**விருச்சிகம்:** வருங்கால நலனுக்காகச் செய்த செயல் பலன் அளிக்கும். புதிய வீடு, நிலம் வாங்கி மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைவீர்கள். நன்மையும் மகிழ்ச்சியும் கிடைக்கும் நாள்.

**தனுசு:** குழந்தைகளின் எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள். பயணங்களால் நன்மை ஏற்படும். மனதில் அமைதி தவழும். நிதிநிலை கூடும்.

**மகரம்:** நெருங்கியவருடன் ஏற்பட்ட பகையைத் தீர்க்க முயல்வது நல்லது. நண்பர்களின் ஆலோசனைகளை ஏற்று முன்னேறுவீர்கள். புதிய திட்டங் கள் சிறப்பாக நிறைவேறும்.

**கும்பம்:** முன்னேற்றமான சூழ்நிலை யைக் காண்பீர்கள். வீண்பயம் நீங்கும். குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்படும். மன நிறைவு கிடைக்கும்.

**மீனம்:** வெளியில் சொல்ல முடியாமல் இருந்த பிரச்சினைகள் தீரும். விரயம் குறையும். பணியிடத்தில் நன்மை காண்பீர்கள். குதூகலமான நாள்.

# வெளியானது நயன்தாராவின் 'நெற்றிக்கண்' ட்ரெயிலர்




நடிகை நயன்தாரா நடிப்பில் உருவாகி உள்ள திரைப்படம் 'நெற்றிக்கண்'. இப் படத்தை 'அவள்' பட இயக்குநர் மிலிந்த் ராவ் இயக்கி உள்ளார். திரில்லர் கதையம் சம் கொண்ட இந்த படத்தை ரவுடி பிக்சர்ஸ் சார்பில் நயன்தாராவும் விக்னேஷ் சிவனும் இணைந்து தயாரித்துள்ளார்கள்.


தற்போது இப்படத்தின் டிரைலர் வெளியாகி சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகி றது. பார்வையற்றவராக இருக்கும் நயன் தாரா சீரியல் கொலைகாரன் ஒருவனை சரியாக கண்டுபிடிப்பதுதான் இந்தப்படத் தின் ஒன்லைன் என்பது டிரைலரில் தெரி கிறது.

நயன்தாராவின் மிரட்டலான நடிப்பில் வெளியாகி இருக்கும் இந்த டிரைலர் ரசிகர் களை அதிகளவில் கவர்ந்துள்ளது. மேலும் இப்படம் ஓடிடி தளத்தில் ஆகஸ்ட் 13ம் தேதி வெளியாக இருக்கிறது.









# வாழ்க்கை முரண்பாடுகள்


வாழ்க்கையில் இரண்டு வகை மக்கள் மட்டுமே மகிழ்ச்சியாக உள்ளனர்: ஒன்று பைத்தியம் மற்றொன்று குழந்தைகள். எனவே ஒரு இலக்கை அடைய வேண்டும் என்றால் அதில் பைத்தியமாக இருங்கள். ஒரு குழந்தை போல சந்தோஷமாக இருங்கள்.

வாழ்க்கையில் நீங்கள் அடைந்ததை பத்திரப் படுத்தக் கற்றுக் கொண்டு, வாழ்க்கையை அனுபவித்து விடுங்கள்!

சோப்பு தயாரிக்க, எண்ணெய் தேவை. ஆனால் எண்ணெயை போக்க மறுபடியும் சோப்புதான் தேவை. இதுதான் வாழ்க்கையின் முரண்பாடு. இந்த சூட்சுமத்தை உணர்ந்து வாழ்ந்தால் வெற்றி அடையலாம். உங்களைக் கட்டிப்பிடிக்கவோ அல்லது உங்கள் தோளைத் தட்டிக்கொடுக்கவோ யாரையும் எதிர்பார்க்கா தீர்கள். உங்களுக்காக அழவும் சிரிக்கவும் ஆட்கள் இருந்தாலும் அவர்கள் அனைவரும் ஒரு நாள் இல்லை ஒரு நாள், தூர விலகிச் சென்று விடுவார்கள். பிரிவும் மரணமும் மனித வாழ்க்கையில் நிழலெனத் தொடரும் விஷயங் கள். பிரியமானவர்கள்தான் அதிக காயங் களை ஏற்படுத்துவார்கள். ஆனால் அதற்காக நீங்கள் அழுது கொண்டிருக்கக் கூடாது.

உங்களை உண்மையாக நேசிப்பவர்களுக் காக நீங்கள் உங்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே! அனுபவதித்து ரசித்து. நாம் யார் எதற்காக இந்த பிறவியை எடுத்துள்ளோம் என்பதைப் பற்றி [illegible] தெளிந்து [illegible] யா[illegible] வாழ்க்கைப் பயன் என்பதை அறிந்துதெளிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளியில் திருமணம்

**வா**ழ்க்கையின் முக்கிய தருணமான திருமணத்தை விண் வெளியில் நடத்துவதற்கு வாய்ப்பை அமெரிக்க விண்வெளி நிறுவனம் உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவை சேர்ந்த 'ஸ்பேஸ் பெர்ஸ்பெக்டிவ்' நிறுவனம், கால்பந்து மைதானம் அளவிலான பலூன் போன்ற 'கேப்சூல்' ஒன்றை உருவாக்கி வருகிறது. இது 2024க்குள் விண் வெளிக்கு செலுத்தப்பட உள்ளது. இது விண்வெளியில் நிலை நிறுத்தப்பட்ட பின், அங்கிருந்தவாறே திருமணம் செய்துகொள்ள லாம். இப்பயணத்துக்கான கட்டணம் 93.66 லட்சம்.

இந்த 'கேப்சூல்' கடல் மட்டத்தில் இருந்து 1 லட்சம் அடி (31 கி.மீ.,) உயரம் வரை பறக்க உள்ளது. சாதாரண பயணிகள் விமானம் என்பது 30 ஆயிரம் - 45 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும். இத்திட்டத்தில் பயணிகள் விண்வெளியில் இருந்து பூமியின் அழகை 360 டிகிரி கோணத்தில் ரசிக்கலாம். எட்டு பேர் பயணிக்கலாம். இதன் மொத்த பயண நேரம் ஆறு மணி. இதில் புறப்படுதல், தரையிறங்குதல் தலா இரண்டு மணி நேரம். மீதி 2 மணி நேரம் விண் வெளியில் இருக்கும்.



## மேற்கத்தேய நாடுகளை நம்புவதால் பயனில்லை

**ஈரானின் மூத்த தலைவர் தெரிவிப்பு**

தெஹ்ரோன், ஜூலை 31
எந்தவொரு விடயத்திலும் மேற்கத்திய நாடுகளை நம்புவதால் பயனில்லை என்று ஈரான் மூத்த மதத் தலைவர் அயத்துல்லா அலி காமெனி தெரிவித்துள்ளார். ஈரான் அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பாக எழுந்த கேள்விக்கு அவர் இவ்வாறு பதில் வழங்கினார்.
ஈரானின் அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது தொடர்பான விவகாரத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் பேச்சு நடத்த கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து அதிபர் ஹசன் ரவுஹானி முயன்று வருகிறார். இதற்கான வாய்ப்பு உருவாகி வந்த நிலையில், அடுத்த மாதம் ஈரானின் அதிபராகப் பதவியேற்கும் இப்ராஹிம் ரைசி ஆட்சிக் காலத்திலேயே ஈரான் அமெரிக்கா இடையே அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பேச்சு தொடங்கும் சூழல் உருவாகியுள்ளது. அனைத்து விதிமுறைக் கட்டுப்பாடுகளுக்கும் ஈரான் ஒப்புக்கொண்டால் அணு ஆயுத ஒப்பத்தத்தில் இணைவதில் அமெரிக்கா தயாராக இருக்கிறது என்று ஜோ பைடன் தெரிவித்தார். இந்த விவகாரத்தில் அமெரிக்கா ஈரான் இடையே சமரசத்தை ஏற்படுத்த மேற்கத்திய நாடுகள் பெரிதாக அக்கறை காட்டவில்லை. அத்துடன் அமெரிக்காவுக்கு அழுத்தத்தை வழங்கவும் அவற்றால் முடியவில்லை. இந்தப் பின்னணியிலேயே அயதுல்லா செய்தியாளர் சந்திப்பொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)

# தலிபான்களுக்கு பின்னால் சீனா?

## உலக நாடுகள் சந்தேகம்

**காபூல், ஜூலை 31**
**ஆப்கன் மண்ணை சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து தலிபான்களின் அண்மைக்கால திடீர் எழுச்சிக்குச் சீனா காரணமாக என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



தலிபான்களுடன் ஆப்கன் அதிபர் அஷ்ரப் கனி தீவிரப் பேச்சை நடத்த முயன்றுவந்த நிலையில், சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீயை தலிபான்கள் புதன்கிழமை சந்தித்தனர். ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலை குறித்தும், அமைதி, அரசியல், பொருளாதாரம் ஆகியவை குறித்தும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டன. இரு நாட்டு உறவு குறித்தும் பேசப்பட்டது.
இந்த நிலையில், சீன வெளியுறவுத் துறை அமைச்சரிடம் ஆப்கான் நிலத்தை சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்த விடமாட்டோம் என்று தலிபான்கள் உறுதி அளித்ததாகவும், ஆப்கன் விவகாரத்தில் சீனா தலையிடாது என்றும், நாட்டில் அமைதியை ஏற்படுத்த சீனா உதவும் என்றும் சீன வெளியுறவுத் துறை அமைச்சர் உறுதியளித்தார் என்றும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

**பின்னணி:**
2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் அல் குவைதாவால் தகர்க்கப்பட்டது. இதன் பின்னர் உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் நடவடிக்கையை ஆரம்பித்த அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைத்திருந்த தலிபான்களை விரட்டி தேர்தலை நடத்தி ஜனநாயக ஆட்சியமைக்க உதவியது. எனினும் கடந்த 20 வருடங்களாக ஆப்கானில் இருந்து தலிபான்களை நிரந்தரமாக அழிக்க ஆப்கானிஸ்தானால் முடியவில்லை. இதையடுத்து ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகளை அமெரிக்கா திரும்பப் பெற்றுள்ளது. அமெரிக்கப் படைகள் தாயகம் திரும்பி வரும் நிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பெரும் எழுச்சி பெற்று வருகின்றனர். தலிபான்களுக்குப் பின்னணியில் ஏதோவொரு பலமான சக்தி இருக்கின்றது என்று அமெரிக்காவும் உலக நாடுகளும் சந்தேகம் வெளியிட்ட நிலையில், தற்போது 'ஆப்கானிஸ்தானை சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம்' என்று தலிபான்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கொரிய தேசங்களிடையே தகவல் தொடர்பு சேவை!

சியோல், ஜூலை 31
வடகொரியா தென்கொரியா இடையே ஓராண்டுக்குப் பிறகு தகவல் தொடர்பு சேவை தொடங்கப்பட்டுள்ளது.
தகவல் தொடர்பு சேவையை இரு நாடுகளுக்கிடையே தொடங்குவது குறித்து கடந்த ஏப்ரல் மாதம் முதலே இரு நாட்டு அதிகாரிகளும் பேச்சு நடத்தி வந்தனர். இந்த நிலையில் தற்போது அந்தச் சேவை தொடங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வடகொரியாவின் அரசு ஊடகம் வெளியிட்ட செய்தியில், 'இரு நாடுகளின் உயர் தலைவர்கள் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தின்படி இரு நாடுகளுக்கிடையே தகவல் தொடர்பு சேவை தொடங்கப்பட்டுள்ளது' என்றுள்ளது.
முன்னதாக, வடகொரியாவின் ரகசியத் தகவல்களைத் தென்கொரியா வெளியிட்டு வருவதாக அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை வடகொரியா சுமத்தியது. மேலும், இரு நாடுகளின் எல்லைப் பகுதியில் அமைந்திருந்த பொதுவான தகவல் தொடர்பு அலுவலகத்தை வடகொரியா கடந்த வருடம் தகர்த்தது. (ம)



## தலிபான் அமைப்பினர் சாதாரண குடிமக்களே

**இம்ரான் கானின் கருத்து இது**

இஸ்லாமபாத், ஜூலை 31
தலிபான்கள் சாதாரணக் குடிமக்களே. அவர்கள் ராணுவ உடை அணிந்தவர்கள் அல்லர் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இம்ரான்கான் தெரிவிக்கையில், 'பாகிஸ்தானில் உள்ள அகதி முகாம்களில் 5 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இதில் தலிபான்கள் இனக்குழுவைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். தலிபான்கள் ராணுவ உடை அணிந்தவர்கள் அல்லர். அவர்களும் சாதாரணக் குடிமக்களே' என்று தெரிவித்தார்.
தலிபான்களுக்கு பாகிஸ்தான் உதவுகிறதா? என்ற கேள்விக்கு, 'இதில் உண்மையில்லை. ஆப்கானில் நடந்த போரில் ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். செப்ரெம்பர் இரட்டை கோபுரத் தாக்குதலில் எங்களுக்குத் தொடர்பில்லை' என்றார்.
ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா, நேட்டோ படைகள் வெளியேற்றத்துக்குப் பிறகு, இராக், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய எல்லையோரப் பகுதிகளை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். இதனைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவுகிறமை குறிப்பிடத்தக்கது. (ம)



# இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட சிலைகள் திரும்ப ஒப்படைப்பு!

## ஆஸ்திரேலியா பெருந்தன்மை

கான்பெரா, ஜூலை 31
ஆஸ்திரேலியாவின் அருங்காட்சியகங்களில் உள்ள இந்தியாவுக்குச் சொந்தமான சிலைகளை திரும்ப ஒப்படைக்க ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது. ஆஸ்திரேலியாவின் கன்பெரா தேசிய அருங்காட்சியகத்தில் தமிழகத்தின் சோழர் காலச் சிலைகள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கலைப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.
இதில் சிலை கடத்தல் குற்றவாளியான சுபாஷ் கபூரிடம் இருந்து வாங்கப்பட்ட மற்றும் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடத்தப்பட்ட 13 கலைப்பொருள்கள் உட்பட 14 பொருள்கள் இந்தியாவைச் சேர்ந்தவை என்பதை அருங்காட்சியகம் கண்டறிந்துள்ளது. இந்த கலைப்பொருள்களை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக்க ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது. அருங்காட்சியகத்தின் இயக்குநர் நிக் மிட்செவிட்ச் கூறும்போது, "இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் கூட்டு முயற்சியால் கலாச்சார ரீதியான பொருள்களை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைப்பதில் பெருமைப்படுகிறோம். விரைவில் சிலைகள் இந்தியாவுக்கு அனுப்பப்படும். சிலை ... தீர்வு காண விரும்புகிறோம் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





## யோகா பயிற்சி

வலி.தென்மேற்கு.ஜூலை 31
முல்லைத்தீவு மாவட்டச் செயலக அலுவலர்களுக்கான நான்கு நாள்களைக் கொண்ட யோகா பயிற்சி வகுப்பு கடந்த புதன் கிழமை செயலகத்தின் பண்டாரவன்னியர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
யோகா பயிற்றுவிப்பாளரான பு.பிரணவனின் வழிகாட்டலில் இடம்பெற்றது.
மாவட்டச் செயலர், மேலதிக மாவட்டச் செயலர், உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட கணக்காளர் உள்ளடங்கலாக பல உயர் அதிகாரிகள் பங்குபற்றினர். (ஜ-115)

### வனவளத் திணைக்களத்தால்

# எல்லையிடப்பட்ட காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை

வவுனியா,ஜூலை 31
**வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டுள்ள காணிகள் மற்றும் காடுகளாக காணப்படும் மக்களின் விவசாய காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**



வவுனியா பிரதேச செயலகத்தில் கள உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதன்போது வனவளத் திணைக்களத்தினரால் எல்லையிடப்பட்டுள்ள மற்றும் காடுகளாக காணப்படும் மக்களின் விவசாய காணிகள் தொடர்பாக பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
குறிப்பாக பொதுமக்களால் நீண்டகாலமாக விவசாயம் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் காடுகளாக காணப்படும் 2 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட்டது. குறித்த நிலங்கள் தொடர்பாக கமநல சேவைத் திணைக்களத்தினரும் வனவளத் திணைக்களத்தினரும் இணைந்து அந்த காணிகளின் எல்லைகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கையை உடன் ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.
இதேவேளை ஈச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 59 குடும்பங்களை குடியேற்றம் செய்வதற்குரிய இடத்தை விடுவித்து தருகிறோம் எனவும் வனவளத் திணைக்களத்தினர் இதன்போது உறுதியளித்தனர்.
இக் கலந்துரையாடலில் வவுனியா பிரதேச செயலர் நா.கலதாசன், கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-110)

## ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மீண்டும் தடை

கொழும்பு,ஜூலை 31
கொரோனாத் தொற்றுக் காரணமாக, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து வரும் பயணிகள் விமானங்களுக்கு, ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மீண்டும் தடைவிதித்துள்ளது.
டுபாயைத் தலைமையாகக் கொண்ட எமிரேட்ஸ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கைக்கு அமைய, இலங்கை உட்பட நாடுகளின் பயணிகள் விமானங்களுக்கு இந்தத் தடையுத்தரவு எதிர்வரும் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## இனப் பிரச்சினையை தீர்க்காவிடில் நாடு ஒருபோதும் முன்னேறமுடியாது

### தேசிய சமாதான பேரவை சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை 31
இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல், நாடு ஒருபோதும் முன்னுக்குச் செல்ல முடியாது என்று தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.
இது தொடர்பில் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவிக்கையில், இனப் பிரச்சினைக்கு தீர்வு காண 1956 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் முயற்சித்தனர். என்றாலும் அந்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. எனினும் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ள இந்த அரசால் அதனைச் செய்யமுடியும்.
போர்க் குற்றங்கள் தொடர்பில் எமக்கு எதிராக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்க அரசு முறையான நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றது.
உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைத்து இதனை செய்திருந்தால் எமக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் குறைந்திருக்கும்- என்றார். (ஒ.4)




## வெளிநாடு செல்வோருக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு,ஜூலை 31
தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லவுள்ளோருக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மேல் மாகாணத்தில் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ள ஆயிரத்து 200 பேர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்காக இணையவழியூடாக பதிவுசெய்துள்ளனர்.
அதற்கமைவாக வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ளவர்களுக்கு பைஸர் தடுப்பூசியை செலுத்துவதற்கு, சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. தற்போது இராணுவ மருத்துவப் பிரிவினரால், தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
அதேவேளை வெளிநாடு செல்வதற்கான கடவுச்சீட்டு மற்றும் தொழில் ஒப்பந்தம் ஆகியவை கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் இலங்கை வேலை வாய்ப்பு பணியகத்தின் www.slbfe.lk என்ற இணையதளத்தின் ஊடாக, தடுப்பூசி யைப் பெற்றுக்கொள்ள பதிவுசெய்ய முடியும்.
அவ்வாறு பதிவு செய்ததன் பின்னர் அவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும் தினம், நேரம் மற்றும் இடம் என்பவை அறிவிக்கப்படும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ஒ.4)

# செயற்றிறனற்ற தடுப்பூசியை கொள்வனவுசெய்யத் திட்டம்

கொழும்பு,ஜூலை 31
கொரோனா மற்றும் திரிபடைந்த டெல்டா வைரஸ் தொற்றுக்களுக்கு எதிராக குறைந்த செயற்றிறனைக் கொண்டது என்று அடையாளம் காணப்பட்டுள்ள சினோவெக் தடுப்பூசியின் 13 மில்லியன் டோஸ்களை, இலங்கை கொள்வனவுசெய்யத் தீர்மானித்துள்ளது என்று ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவின் கொரோனாத் தொற்றை எதிர்க்கின்ற இரண்டு தடுப்பூசிகளான சினோவெக் மற்றும் சைனோஃபோம் ஆகிய தடுப்பூசிகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதியை அளித்திருந்தது. இருந்தபோதிலும் உலகின் பல்வேறு நாடுகளும் சீனத் தடுப்பூசிகளை நிராகரித்து வருகின்றன.
குறிப்பாக சினோவெக் தடுப்பூசி கொரோனாத் தொற்றை எதிர்க்கின்ற மிகக்குறைந்த செயற்றிறனைக் கொண்டது என்று கூறப்படுகின்றது. எனினும் சைனோஃபோம் தடுப்பூசியானது, 85 வீதத்துக்கும் அப்பால் திரிபுபெற்ற டெல்டா வைரஸ் தொற்றையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர்.
இந்த நிலையில் சினோவெக் தடுப்பூசியின் 13 மில்லியன் டோஸ்களை இறக்குமதிசெய்ய இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.
அதேவேளை, தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபையின் தடுப்பூசி பற்றிய குழுவின் மூன்று உறுப்பினர்கள், சினோவெக் தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கு எடுத்துள்ள தீர்மானத்தை கடுமையாக எதிர்த்துள்ளதுடன், குழுவிலிருந்து விலகியுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியும் முயலும்



முன்னொரு காலத்தில் சாம்பல் நிற முயலும், தந்திரமான குள்ள நரியும் இருந்தன.

பருவநிலை மாறியது. விரைவிலேயே வந்துவிட்டது குளிர் காலம். பனிப்புயல் வீசியது. வானத்திலிருந்து சிறுசிறு பனித்துகள்கள் மழைபோல் கொட்டத்தொடங்கின. குளிரின் கடுமையால் முயலின் சாம்பல் நிறம் முற்றிலும் வெளுத்து, பனி வெண்மையானது.

"இந்தக் குளிரைத் தாங்க முடியவில்லை. நான் அவசியம் ஒரு குடிசை கட்டிக்கொள்ளத்தான் வேண்டும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டது முயல்.

அது கொஞ்சம் மரப்பட்டைகளைச் சேகரித்து வந்து வேலையைத் தொடங்கியது. வீடு கட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த முயலைப் பார்த்து குள்ளநரி கேட்டது "அடேய், முயல் பயலே, நீ என்னதான் செய்து கொண்டிருக்கிறாய்?"

"நீ பார்த்துக்கொண்டுதானே இருக்கிறாய் குள்ளநரி அக்கா? நான் கதகதப்பாக வசிக்க ஒரு குடிசை கட்டிக் கொண்டிருக்கிறேன்."

'ஆமாம், ஆமாம். ரொம்ப நல்ல யோசனைதான்" என்ற குள்ளநரி, பிறகு தனக்குள் ரகசியமாகச் சொல்லிக்கொண்டது: "நாமும் ஏன் ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ளக்கூடாது? ஆனால் நான் கட்டப்போகும் வீடு ஒரு பளிங்கு மாளிகையாக இருக்கும். ஆமாம், நான் ஒரு அற்புதமான பளிங்கு அரண்மனைபோன்று என் வீட்டைக் கட்டுவேன். முட்டாள்கள்தான் மரப்பட்டைகளால் வீட்டைக் கட்டுவார்கள். ஹா...ஹா...ஹா..."

பிறகு அந்தக் குள்ள நரி, பெரிய பெரிய பனிக்கட்டிகளைத் தூக்கிவரத் தொடங்கியது. ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்தப் பனிக்கட்டிகளை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கியது.


இரண்டு வீடுகளும் ஒரே நேரத்தில் கட்டி முடிக்கப்பட்டன. முயலும், நரியும் அதனதன் வீட்டுக்குள் குடிபுகுந்தன. குள்ளநரி தன் பனிக்கட்டி வீட்டின் ஜன்னலில் அமர்ந்தபடி முயலை உற்றுப் பார்த்து, "இந்த முயல் பயலைப் போல ஒரு மட சாம்பிராணி எங்காவது இருப்பானா!" என்று நினைத்து கேலிச் சிரிப்புச் சிரித்தது. "இவன் நாகரிகம் தெரியாத நாட்டுப்புறத்தான்! போயும் போயும் அந்த மரப் பட்டைகளை வைத்து வீடு கட்டியிருக்கிறானே, என்ன ஒரு கோமாளித்தனம்! என்னுடைய வீடு தூய்மையாகவும், பளபளப்பாகவும் இருக்கிறது. இது உண்மையிலேயே ஒரு பளிங்கு அரண்மனைதான். ராஜாக்களிடம்தான் இதுபோன்ற வீடு இருக்கும்."

குளிர்காலம் இருக்கும்வரை நரிக்கு ஏதும் சிக்கலில்லை. இளவேனிற்காலம் வந்ததும்தான் தொடங்கியது பிரச்சினை. அப்போது கதிரவன் வெப்பமாகப் பிரகாசிக்கத் தொடங்கினான். குள்ளநரியின் அரண்மனை உருகித் தண்ணீராக ஓடியது.


அப்போது தான் நரி தன்னுடைய தற்பெருமையை எண்ணி மனம் வருந்தியது.


**நீதி: தற்பெருமை கொள்ளல் ஆகாது**

## வழிகாட்டிடுவோம்



## வர்ணம் தீட்டுவோம்





## பொது அறிவு

01. இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?
டி.எஸ். சேனநாயக்கா

02. ருவான் வெலிசாயவைக் கட்டுவித்த மன்னன் யார்?
துட்டகைமுனு

03. கண்ணாடி செய்யப் பயன்படும் மணல் எது?
சிலிக்கா

04 உலகின் தலைசிறந்த பரிசு எது?
நோபல்

05. விற்றமின் 'B' குறைபாட்டால் ஏற்படும் நோய் எது?
பெரிபெரி

06. புவிக்கு மிக அண்மையில் உள்ள கோள் எது?
புதன்

07. உடல் வியர்க்காத பிராணி எது?
ஒட்டகம்

08. "ஏழைகளின் அப்பிள்" என அழைக்கப்படுவது எது?
வாழைப்பழம்

09. இலங்கையின் மிகச் சிறிய மாவட்டம் எது?
கொழும்பு

10. கொவிட்19 முதன் முதலில் எந்த நாட்டுக்கு வந்தது?
சீனா

## ருவிற்றர்

1. ருவிற்றர் நிறுவனத்தின் தலைமைச் செயலகம் கலிஃபோர்னியாவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ளது.
2. ஜாக் டோர்ஸே, பிஸ் ஸ்டோன், நோவா கிளாஸ், ஈவன் வில்லியம்ஸ் ஆகியோர் இணைந்து கடந்த 2006ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ருவிற்றர் வலைதளத்தை தொடங்கினர்.
3. 2006ம் ஆண்டில் ஜூலை மாதம் முதல் ருவிற்றர் செயல்பாட்டுக்கு வந்தது.
4. முதல் 3 ஆண்டுகளுக்கு எந்தவித வருமானமும் இல்லாமல் ருவிற்றர் இயங்கி வந்தது.
5. 2020ல் ருவிற்றர் நிறுவனத்தின் வருமானம் 3.72 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.
6. ருவிற்றர் நிறுவனத்தில் 2008ம் ஆண்டில் 8 ஊழியர்கள் மட்டுமே பணியாற்றி வந்தனர். 2020ம் ஆண்டில் இது 5,500ஆக அதிகரித்தது.
7. உலகில் அதிகபட்சமாக அமெரிக்காவில் 90 சதவீதம் பேர் ருவிற்றரில் இணைந்துள்ளனர்.

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

இயந்திரமயமாக ஓடிக்கொண்டிருக்கும் மனிதனுக்கு தடையாக இருக்கும் ஒன்றே நோய். நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம் என எமது முன்னோர்கள் கூறியுள்ளனர். எத்தனை செல்வங்கள் இருந்தாலும் நோயின்றி ஆரோக்கியமாக வாழ்வதே பெருஞ்செல்வம். எவ்வளவு பணச் செல்வம் இருந்தாலும் ஒரு நோய் இருந்தால் அதை அனுபவிக்க முடியுமா? அன்றைய மனிதர்கள் நூறு வயது வரை நோயின்றி வாழ்ந்தார்கள். அதற்குக் காரணம் அவர்களது உணவுகளும் உடலுழைப்பை பயன்படுத்தியமையும் ஆகும். அவர்கள் தமக்குத் தேவையான உணவைத் தாமே பயிரிட்டனர். அவற்றில் எந்தவொரு இரசாயனமும் இருக்கவில்லை. அவர்கள் தமது உடலையும் அவர்களைச் சார்ந்த சூழ்நிலையும் சுத்தமாகவைத்திருந்தனர். அதனால் அவர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள்.

இன்றோ மூன்று வேளையும் உணவைப் போல் மருந்தை உண்டுகொண்டு இருக்கிறார்கள் மனிதர்கள். ஒரே ஒருவருக்கே அவ்வளவு நோய்கள். அதற்குக் காரணம் உணவுகள், பயிர்களோடு கலந்த இரசாயனங்கள், மனஅழுத்தம் மற்றும் சூழல் மாசு இன்றைய உணவின் பெயர் துரித உணவு. இவ்வாறான உணவுகளை உண்பதால் எமக்கு நோய்கள் ஏற்படும். இன்று பலர் உடற்பயிற்சி செய்யவும் மறந்து விட்டனர். நாம் எமது உடலை நோயில்லாமல் ஆரோக்கியமாகப் பேண இரசாயனம் அற்ற சிறந்த உணவுகளை உட்கொள்ளல், உடல் சுத்தத்தைப் பேணல், தினமும் உடற்பயிற்சி செய்தல், நல்ல தூக்கத்தையும் ஓய்வையும் பெறல், சுற்றுச் சூழலை தூய்மையாகப் பேணல் மற்றும் மனதை ஒரு நிலைப்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

"மனமுண்டேல் இடம் உண்டு", விருப்பத் தோடு இவற்றை மேற்கொண்டால் நோயற்ற ஆரோக்கியமான வாழ்வு வாழலாம். எனவே, "நோய்க்கு இடம் கொடேல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### ஹைஏஸ்...

முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

உரும்பிராய் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

தான் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது மது போதையில் ஹைஏஸ் ரக வாகனத்தில் வந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் அலுவலர்கள் தன்னைக் கடத்திச்சென்று வாகனத்தினுள்வைத்து கைத்துப்பாக்கியால் தாக்கி சில கிலோமீற்றர் தூரம் கொண்டு சென்று வீதியில் வீசிவிட்டு சென்றனர் என பாதிக்கப்பட்ட இளைஞன் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஓ.5)

### மூத்த....

வாக அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு, தொற்றுக்குள்ளான அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களை கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதார பிரிவினர் ஈடுபட்டுவருகின்றனர். (த-26)

### யாழ்.போதனா...

தாதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் இணையம் ஊடாக இடம்பெற்று வந்தன. இரண்டு வாரங்களுக்கு முன்னரே மாணவர்கள், தாதிய பயிற்சிக் கல்லூரிக்கு சமுகமளிக்கத் தொடங்கினர். அத்துடன் பயிற்சிக்காக விடுதிகளுக்கும் சென்றனர்.

இந்தநிலையில் அவர்களில் சிலருக்கு கொரோனா அறிகுறி தென்பட்டதையடுத்து பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 25 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

எஞ்சிய தாதிய மாணவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. (ஓ.5)

### எகிறும்...

தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 6 ஆயிரத்து 657 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 716 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரத்து 212 ஆக உயர்வடைந்துள்ளது. (த22)

### 56 பேர்...

படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா இறப்புகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 380 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 56 பேரில் 38 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-22)

# தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மூடப்பட்ட அலகுகள் திங்கட்கிழமை முதல் திறக்கும்

சாவகச்சேரி, ஜூலை 31

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அலுவலர்களுக்கு கொரோனாத் தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த திட்டமிடல் அலகு மற்றும் வெளிக்கள அலுவலர் அலகு போன்றவை விடுவிக்கப்பட்டதையடுத்து நாளை மறுதினம் தொடக்கம் செயற்படவுள்ளது.

இந்த அலகுகள் மூடப்பட்டிருந்த நிலையிலும் தொற்று ஏற்படாத அலுவலர்கள் மூலம் இந்த அலகுக்கு உரிய பணிகள் சுழற்சி முறையில் மக்களுக்கு மேற்கொள்ளப்பட்டுவந்தன. அலகில் பணியாற்றி தொற்று ஏற்பட்ட அலுவலர்கள் மற்றும் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்த அலுவலர்கள் போன்றோர் நேற்று விடுவிக்கப்பட்ட நிலையில் அலகின் செயற்பாடுகள் திங்கட்கிழமை இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டது.

தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்த பிரதேச செயலர் நேற்று பணிக்கு வந்தார்.

ஏனைய அலுவலர்கள் திங்கட்கிழமை வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ப-9)

## சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 31

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிர்ப்பு தெரிவித்து சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் இரத்தினபுரியில் நேற்று எதிர்ப்புப் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இலவச கல்விக்கான மாணவர் அமைப்பு, ஒன்றிணைந்த தொழிற்சங்க உறுப்பினர்கள் கொத்தலாவல சட்டவரைவு தொடர்பாக விழிப்பூட்டும் கையேடுகளை புறக்கோட்டையில் நேற்று பகிர்ந்தளித்தனர். (த-இ)

யாழ். மாவட்ட

## காணி இணக்க சபையின் அமர்வுகள் நாளை முதல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாண மாவட்ட காணி இணக்க சபை அமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் கொட்டடி சனசமூக நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இணக்க சபை அமர்வில் முதற்கட்டமாக பழைய பிணக்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளது. புதிய பிணக்குள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னரே அனுமதிக்கப்படும். மாவட்ட மட்டத்தில் பழைய பிணக்குகளுடன் ஏற்கனவே தொடர்புடையவர்கள் 0755890730 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தவிசாளர் தேவதயாளன் அறிவித்துள்ளார். (ஐ-50)


விற்பனைக்கு

CD 125 (GV - XXXX) Benly மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 44 711 22


கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்

## பீடமாக்கப்பட்டது மிலோதா நிறுவனம்

கொழும்பு, ஜூலை 31

கொழும்பு கோட்டை ஸ்ரீமத் பரோன் ஜெயதிலக மாவத்தையிலுள்ள மிலோதா நிறுவனம் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பீடமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்களின் விடயதானங்களை மீண்டும் சீர்திருத்தம்செய்து ஜனாதிபதியால் நேற்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் இது அறிவிக்கப்பட்டுள்ளது. மிலோதா நிறுவனம் என்று சொல்லப்படுகின்ற 'அக்கடமி ஒவ் பினான்சியல் ஸ்ரடீஸ்'இதற்கு முன்னரும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தனிப்பட்ட நிறுவனமாக செயற்பட்டதோடு புதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தற்போது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பீடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)


வேலையாள்கள் தேவை

1. AD வாகன அனுமதிப்பத்திரம் உள்ள கன்டர், லொறி சாரதி தேவை.
2. Computer Operetor, Commerce படித்த பெண் வேலையாள்கள் தேவை.
3. லேபரஸ் தேவை (பெண்கள்)

திங்கள் 02.08.2021 காலை நேரில் வரவும்

Colombo Paint Center நிறுவனம்

பருத்தித்துறை வீதி, நீர்வேலி சந்தி.



கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக
கடமையாற்றிய
அமரர்
இராசா ரமேஸ்குமாரன்
பிறப்பு 06.03.1977 இறப்பு 29.07.2021
அவர்களின் மறைவிற்கு
எமது விழிநீர் அஞ்சலியை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்,
தெல்லிப்பளை.


## ஹைஏஸ் விபத்தில் பசு உயிரிழந்தது

கொடிகாமம், ஜூலை 31

கொடிகாமம் பகுதியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச்சென்ற ஹைஏஸ் வாகனமும் வீதியில் சென்றுகொண்டிருந்த பசுவும் மோதுண்டதில் பசு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் கொடிகாமம் எருவன் கட்டையாப்பு சந்திக்கு அருகாமையில் நேற்றிரவு இடம்பெற்றது. குறித்த விபத்தின்போது 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பசு உயிரிழந்தது என்றும் ஹைஏஸ் வாகனமும் சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-159)

## வாளுடன் கைதானவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பாண்டவட்டை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வாள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

இவர் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமைக்காக ஏற்கனவே ஒரு தடவை நீதிமன்றத்தால் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-20)


31ஆம் நாள் நினைவஞ்சலி




அமரர் பொன்னையா
கணேசலிங்கம்
புலோலி மேற்கு.
(கிளிநொச்சி)
எமது சனசமூக நிலையத்தின்
வளர்ச்சிக்காக உழைத்த
உத்தமர்களில் ஒருவரான அமரர்
பொன்னையா கணேசலிங்கம்
அவர்களின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திப்பதுடன், அவரின்
குடும்பத்தினருக்கு எல்லாம் வல்ல
இறைவன் ஆறுதல் அளிப்பாராக!
ஓம் சாந்தி!

மேலைப்புலோலி
சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர்
புலோலி மேற்கு, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 . 05 . 1932

மறைவு
23 . 07 . 2019

## அமரர் அப்புக்குட்டி நாகம்மா

திதி:- ஸப்தமி (31.07.2021)

அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
இரண்டாண்டு ஆயிற்றோ
நீர் எமை விட்டுப் பிரிந்து
சொந்த பந்தங்கள் வாழ்வாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே
என்றும் உமை நினைந்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கருகப்புலம்,
கணேஸ்வரம், அளவெட்டி.

குடும்பத்தினர்

---

**கண்ணாடி மேசைகள் விற்பனைக்கு**

நல்லூர்ப் பகுதியில் கண்ணாடி மேசை (Vintage Style) விற்பனைக்கு.

தொடர்பு: 075 296 8696

---

**NEEDED**

We Needed Experince Receptionist

Gnanams Hotel

077 630 9947/ 076 222 0632

---

**வேலைவாய்ப்பு**

புத்தளம் மாவட்டத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை. நிரந்தர வேலை, சம்பளம்

35,000/= + OT

உணவு தங்குமிட வசதி தரப்படும்.

தொடர்பு

077 0079751 / 0777 395324 / 077 4231332

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்
17 . 11 . 1952

விண்ணில்
11 . 08 . 2020

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர்

## திருமதி நாகலெட்சுமி வாமதாசன் அவர்களின்

"ஓராண்டு நினைவஞ்சலி"

ஓராண்டு முடிந்தாலும் ஓயவில்லை உம் நினைவு
நீராண்ட மனமெல்லாம் உமை நினைத்து வாடுதம்மா !
தாராள மனம் படைத்த தயாள குணவதியே
தவற விட்டுத் துடிக்கின்றோம் தாயன்பு கிடைக்காதா?
நேராக நீர் வந்து எம் துயரை பார்த்து விட்டால்
நான் ஏன் போனேன் என நீயே நினைப்பாயம்மா !
பாராளும் பிள்ளைகளாய் எமை வளர்த்து விட்டாலும்
பாசத்தை கொட்டி விட யார் வருவார் சொல்லும் அம்மா !

வீட்டிற்கு விளக்கேற்றி விடி விளக்காய் நின்ற உம்மை
தன் பாட்டிற்கு அழைத்துச் சென்ற பரம்பொருளை நோகின்றோம்
சுடுகாட்டிற்கு உமை அழைத்து உமை அக்கினியில் பார்க்க வைத்து
எம் மனதில் தீ வளர்த்தாய் ஏன் என்று சொல் இறைவா !
வாடி நிற்கும் எம் முகத்தை தேடி வந்து துளிர வைப்பாய்
தேடித் தேடி திரிந்தாலும் கிடைக்காது உம் உறவு
எம் தோளில் நாம் தாங்கி ஏற்ற பணி செய்து வைத்து
எம் கடன் தீர்ப்பதற்கு யாம் கொடுத்து வைக்கவில்லை.

"ஸ்ரீ அம்பிகை"
வட்டாரம் - 03
நயினாதீவு

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

077 669 1409

என்றும்
பிரிவுத் துயரில்
குடும்பத்தினர்

---

# மரண அறிவித்தல்



பிறப்பு
23 . 03 . 1954

இறப்பு
29 . 07 . 2021

## திரு. செல்லத்துரை தர்மராஜன்

(ஓய்வு பெற்ற / யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய கணித பாட ஆசிரியர்)

பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட செல்லத்துரை தர்மராஜன் அவர்கள் நேற்று முன்தினம் (29.07.2021) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் செல்லத்துரை - குணமணி தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், தர்மராஜன் சாந்தினிமாலாவின் (ஆசிரிய ஆலோசகர் - யாழ் வலயம்) அன்பு கணவரும், சீர்மாறன் (HNB வங்கி), மதுரா (ஆராய்ச்சி உதவியாளர், மாணவி - பேராதனை), கீர்த்திகன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் பூநகரி பிரதேச சபை), அபிநயன் (பல்கலைக்கழக மாணவன் - மொறட்டுவ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தபஸ்வியின் அன்பு பேரனும், சிறிதரனின் (ஜேர்மன்) அன்பு சகோதரரும், அனுஷா (HNB வங்கி), சுஜிந்தன் (சுதேச மற்றும் ஆயுர்வேத மருத்துவ அபிவிருத்தி அலுவலகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரேவதி (ஜேர்மன்), காலஞ்சென்றவர் களான ரவிந்திரன், மகேந்திரன் மற்றும் ரஜனிமாலா (வவுனியா), தர்சினிமாலா (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனனும், துஷாந்த், துக்ஷா, துவிஷா ஆகி யோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூத உடல் 01.08.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி யளவில் வண்ணார்பண்ணை இந்து மயானத்தில் சுகாதார முறைப்படி தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

---

# மரண அறிவித்தல்



பிறப்பு
22 . 08 . 1927

இறப்பு
29 . 07 . 2021

## திரு. கயிலாயர் கனகரத்தினம்

(ஓய்வு பெற்ற அரச பிரதம லிகிதர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கயிலாயர் கனகரத்தினம் நேற்று முன்தினம் (29.07.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கயிலாயர் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், பொன்னுத்துரை அன்னம்மா தம்பதியினரின் அருமை மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஞானம் (மலேசியா) அவர்களின் அன்புச் சகோதரரும், வனிதா (கனடா), வசந்தா (Technical Officer), துளசிகரன் (ஜேர்மனி), ஹேமலதா (சிங்கபூர் QS), பாலச்சந்திரன் (கனடா - Engineer) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரராஜா மற்றும் ஆனந்தபாலன், கீதா (ஜேர்மனி), மனோகலையரசன் (சிங்கப்பூர் - Engineer), லலிதா (கனடா - Engineer) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

38, [illegible] வீதி,
உரும்பிராய் மேற்கு.

தகவல் : குடும்பத்தினர்
077 486 9567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காய பகோடா செய்வது எப்படி?



முதலில் வெங்காயத்தை நீளவாக்கில் மெல்லியதாக நறுக்கி, ஒரு பாத்திரத்தில் போட்டு, அத்துடன் பொடியாக நறுக்கிய கொத்தமல்லித்தழை, உப்பு, மிளகாய்த்தூள், பெருங்காயம், கடலை மாவு, அரிசி மாவை சேர்க்க வேண்டும்.

ஒரு ஸ்பூன் எண்ணெயை சுட வைத்து அதனுடன் சேர்த்து, சிறிதளவு நீர் தெளித்து அனைத்தையும் ஒன்றாக கலக்க வேண்டும். வாணலியில் எண்ணெய் காய்ந்ததும், ஒட்டாமல் கலவையை எடுத்து போட்டு, மிதமான தீயில் பொன்னிறமாக வறுத்தெடுக்க வேண்டும். சுவையான வெங்காய பகோடா தயார்.



# நெல்லிக்காயிலுள்ள 10 இரகசியங்கள்!

நெல்லிக்காயில் விற்றமின்சி அதிகம் இருப்பதால், தினமும் அதை நாம் நம் உணவில் சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது. இந்த நெல்லிக்காயை நாம் அப்படியே சாப்பிடலாம். குழந்தைகள், பெரியவர்கள் என்று எல்லோருக்குமே இது பிடிக்கும்.

1. **கொழுப்பைக் குறைக்கிறது**
உடல் பருமன் நோயினால் அவதிப்படுபவர்கள் நம் நாட்டில் மிக அதிகம். நீரிழிவு மற்றும் இதய நோய்களையும் இந்த உடல் பருமன் ஏற்படுத்துகிறது. நெல்லிக்காயில் உள்ள அதிகளவிலான புரதச்சத்துக்கள் நம் உடலிலுள்ள கொழுப்பைக் கரைத்து அகற்றுகிறது.

2. **கண் பார்வையை அதிகரிக்கிறது**
கண் புரை என்னும் பார்வை நோயைத் தவிர்ப்பதில் நெல்லிக்காய் பெரிதும் உதவுகிறது. மேலும், கண் சிவப்பாதல், கண்களில் நீர் வடிதல், கண் எரிச்சல், மாலைக் கண் உள்ளிட்ட பல விதமான பிரச்சனைகளைப் போக்குவதற்கும் நெல்லிக்காய் உதவுகிறது. கண்கள் எப்போதும் புத்துணர்ச்சி யுடனும் இருக்கும்.

3. **இதய நோய்களை கட்டுப்படுத்துகிறது**
நம் இதயத்துக்கும் பலவிதமான பலன்களை நெல்லிக்காய் அளிக்கிறது. கொலஸ்ட்ராலின் அளவைக் குறைத்து, அதன் விளைவாக இதயத்தைப் பாதுகாக்கிறது. இதயத்துக்குள் இரத்த ஓட்டத்தையும் சீராக்குகிறது.

4. **தலைமுடியை வலுவாக்குகிறது**
நம் தலைமுடியை வலுவாக்குவதில் கல்சியத்தின் பங்கு அதிகம் உள்ளது. இந்தக் கல்சியம் நம் உடலுக்குள் எளிதாக ஊடுருவுவதற்கு நெல்லிக்காய் உதவுகிறது. நாம் உபயோகப்படுத்தும் ஷம்போக்களில் நெல்லிக்காய் கலந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

5. **விந்தணு உற்பத்திக்கு...**
ஆண்களில் சிலருக்கு விந்தணுக்கள் குறைவாக இருக்கும். அவர்கள் தொடர்ந்து நெல்லிக்காயைச் சாப்பிட்டு வந்தால் விந்தணுக்கள் உற்பத்தியை அதிகரிக்கும்.


6. **நச்சுப் பொருள்களைக் குறைக்க...**
நெல்லிக்காயில் நீர்ச்சத்து அதிகமாக உள்ளது. இதனால் நாம் உண்ணும் உணவுகள் எளிதில் செரிமானமாகும். நச்சுப் பொருள்கள் விரைவில் வெளியேறும். சிறுநீரகங்களையும் இது சீராக இயங்க வைக்கிறது.

7. **மாதவிடாய் வலிகளைக் குறைக்கிறது**
மாதவிடாய் நாள்களில் பெண்கள் நெல்லிக்காயை எடுத்துக் கொள்வதால், மாதவிடாய் காலங்களில் ஏற்படும் வலிகள் குறையும்.

8. **எலும்பு வளர்ச்சிக்கு...**
ஏற்கனவே கூறியது போல், கல்சியம் எளிதாக உடம்பில் உறிஞ்சப்படுவதற்கு நெல்லிக்காய் மிகவும் உதவுகிறது. உடலில் கல்சியம் சேரச் சேர எலும்புகளின் வளர்ச்சி அதிகரிக்கும்.

9. **வாய் துர்நாற்றத்துக்கு...**
நெல்லிக்காயைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், வாய் துர்நாற்றம் உள்ளிட்ட பல பிரச்சினைகளும் விலகி ஓடும். மேலும், பற்களை வலுவாக்கும், ஈறுகளில் ஏற்படும் தொற்றுக்களையும் ஆற்றுகிறது.

10. **மலச்சிக்கலுக்கு விடுதலை**
நாம் சாப்பிடும் உணவுகளை எளிதாகச் செரிமானம் செய்து, மலச்சிக்கலே இல்லாமல் செய்வதற்கு நெல்லிக்காய் மிகவும் உதவுகிறது. அதிலுள்ள நார்ச்சத்துக்கள் தான் இந்த மாயத்தைச் செய்கின்றன



# அழுவதால் ஏற்படும் நன்மைகள்

**வலி நிவாரணி**
2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் அழுவதால் உடலளவிலும் மனதளவிலும் வலி நீங்குவதாகக் கூறியுள்ளது. வலியால் அழும்போது கண்ணீரில் சுரக்கும் ஆக்ஸிடோசின் மற்றும் எண்டோர்ஃபின்ஸ் மனதுக்கு அமைதியையும், வலியைத் தாங்கக் கூடிய வலிமையையும் அளிப்பதாகக் கூறியுள்ளது.

**மற்றவர்களின் அரவணைப்பு**
தெரியாதவர்கள் அழுதால் கூட அருகில் சென்று ஏன் அழுகிறீர்கள் என்று கேட்கும் மனநிலைதான் மனிதனுடைய இயல்பு. அப்படி இருக்க தனக்கு நெருக்கமானவர்கள் அழுதால் பதறி அவர்களுக்கு ஆறுதல் அளித்து அரவணைப்போம். அந்த அரவணைப்பும் அவர்களுக்கு மிகப்பெரும் மன அமைதிதான். அதுவும் மற்றவர்களின் ஆறுதலை எதிர்பார்ப்பதால் வரும் இயல்பான கண்ணீரே.

**மன ஆறுதல்**
பொதுவாக மனம் விட்டு அழுதுவிட்டால் அந்த பிரச்னை சரியாக விடுவதோடு மனதில் ஒரு ஆறுதலும், மனம் ரிலாக்ஸாகவும் இருக்கும். காரணம் நாம் அழும்போது உடம்பில் ஸ்ட்ரெஸ் ஹோர்மோன்ஸ் சுரந்து அது கண்ணீர் வழியாக வெளியே வந்துவிடுமாம். இதனால் அந்த ஹோர்மோன் சுரத்தல் அளவு குறைந்துவிடும் என ஆராய்ச்சியில் நம்பப்படுகிறது. அதனால்தான் நாம் பீல் குட் ஆக உணர்கிறோம் என்றும் சொல்லப்படுகிறது.

**நல்ல தூக்கம்**
அழுது கொண்டே தூங்கி விடும் குழந்தைகளைப் பார்த்திருப்போம். குழந்தைகள் மட்டுமல்ல பெரியவர்களுக்கும் அழுதால் தூக்கம் வரும். மனம் விட்டு அழுதாலோ, கதறி அழுதாலோ நிச்சயம் உங்களுக்குக் கண்ணீர் வரும். தொடர்ந்து அழுது கொண்டே இருந்தாலும் கண் எரிச்சல் ஏற்பட்டு தூக்கத்தை நாடுவீர்கள்.

**கிருமிகளைக் கொல்லும்**
அழும்போது கண்களில் ஐசோஸைமி (lysozyme) என்கிற அமிலம் சுரக்கிறது. அது கண்களில் உள்ள கிருமிகள் மற்றும் அழுக்குகளை நீக்கி சுத்தம் செய்கிறது. இதனால் நீண்ட அழுகைக்குப் பின் கண் பார்வையும் தெளிவடைவதாகவும், வறண்ட கண்களில் ஈரப்பதத்தைத் தக்க வைப்பதாகவும் தேசிய கண் மையம் விவரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடபகுதிக்குள்...

தென்பகுதியிலிருந்து இரவு வேளைகளில் அதிகம் பேர் வடக்கு மாகாணத்துக்குள் வருகின்றனர்.

இந்தநிலையில், அவ்வாறு வருபவர்களை வவுனியா ஏ9 வீதி நுழைவாயிலான மூன்றுமுறிப்பு பகுதியில் கடந்த திங்கட்கிழமை வழிமறித்த சுகாதாரப் பிரிவினர், நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 5.30 வரை 300க்கும் மேற்பட்டவர்களிடம் பி.சி.ஆர். மாதிரிகளைப் பெற்றுக்கொண்டனர். அதன் முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையிலேயே 22 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தேக்கவத்தைப் பகுதியில் ஒருவருக்கும், புளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும், கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், திருநாவற்குளம் பகுதியில் ஒருவருக்கும், யாழ். அரியாலை பகுதியில் இருவருக்கும், களுத்துறை பகுதியைச் சேர்ந்த ஒவருக்கும், யாழ். வேலணை 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், யாழ். கொக்குவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், யாழ். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவருக்கும், கிளிநொச்சி பளையைச் சேர்ந்த ஒருவருக்கும், முல்லைத்தீவு வவுனிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருக்கும், கந்தளாய் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், மிகிந்தலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், யாழ். உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், வவுனியா நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த இருவருக்கும், செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், வவுனியா சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் என 22 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. தொற்றாளர்களை கொவிட் இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுயதனி மைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, தென்பகுதியிலிருந்து வடக்குக்குள் பிரவேசிப்பவர்கள் ஊடாக கொவிட் தொற்று பரவலடைகின்றது என்று பலராலும் கூறப்பட்டுவந்த நிலையில், அதனை உறுதிப்படுத்தும் விதமாக, கடந்த திங்கட்கிழமை வடக்குக்கு வந்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள விடயம் அமைகின்றது.

எனவே, வடக்கு மாகாணத்துக்குள் நுழைவோரைப் பரிசோதிக்க தினமும் இத்தகைய பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை மேற்படி சம்பவம் எடுத்துக்கூறுகின்றது. இந்த விடயத்தில் முறையான உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிடில், வடக்கு மாகாணத்தில் கொவிட் தொற்று அதிகரிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (த-18)

## திங்கள்...

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறிக்கு அறிவித்துள் ளார். கொவிட் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களின் கீழ், அனைவரையும் பணிக்கு அழைக்குமாறு அவர் பணித்துள்ளார்.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில், தடுப்பூசி ஏற்றப்படவேண்டிய மக்கள் தொகையில் அதிக சதவீதமானவர்களுக்கு, இதுவரையில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. பெரும்பான்மையான அரச ஊழியர்களுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. எனவே, அரச சேவைகளை வழமைபோன்று முன்னெடுப்பதற்கு முன்னுரிமையளிக்க வேண்டியுள்ளது. கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதை இலகுபடுத்தும் நோக்குடன், மட்டுப்படுத்தப்பட்ட பணிக்குழாமினரை சுழற்சி முறையில் சேவைக்கு அழைத்தல் மற்றும் வீடுகளில் இருந்தவாறு சேவைகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அனைத்து சுற்றறிக்கைகளும் இடைநிறுத்தப்படுகின்றன என்றும் ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார். (த-இ)

## தடுப்பூசி....

ழந்தவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கேற்ப, அவர்களில் சுமார் 95 சதவீதமானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது. தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டிருந்தபோதும், அவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்து விசாரணை செய்வதும், தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதுபற்றி பிரதேச செயலக மட்டத்தில் துரித கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொண்டு, சில தினங்களுக்குள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்த அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கொவிட் ஒழிப்பு விசேட குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு பணித்தார்.

தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பைஅரசுநிறைவேற்றியுள்ளது. நோய் பரவுவதை தடுக்கும் வகையில் செயற்படுவதும் தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதும் மக்களின் கடமை. எதிர்காலத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்கு வருகைதரும் மக்கள், தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் என்பதனை உறுதிப்படுத்தும் அட்டையைத் தம்வசம் வைத்திருப்பதை கட்டாயமாக்குவது குறித்தும் கொவிட் குழு கவனம் செலுத்தியுள்ளது என்றும் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (த)

## அதிபர்...

நகரங்களில் ஒன்றுகூடிய ஆசிரியர்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி போராட்டத்தைத் தொடர்கின்றனர். மதுகமவில் ஏராளமானோர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர், அதிபர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் நிலையில் இணையவழி கற்பித்தல் செயற்பாட்டிலிருந்தும் ஒதுங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

## மாகாண....

கம்பகா மருத்துவமனை தவிர்ந்த ஏனைய 4 மருத்துவமனைகளையும் கொழும்பு அரசு கையகப்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாத்தளை, நாவலப்பிட்டி, எம்பிலிப்பிட்டி, அவிஸ்ஸாவெல, கம்பஹா, மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொதுமருத்துவமனைகளின் சேவை வழங்கலின் தரம், சமத்துவம் மற்றும் வினைத்திறன் போன்றவற்றை அதிகரிப்பதற்காகவும் இலகுவாக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அவற்றை கொழும்பு சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவருவது பொருத்தமென இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றை கையகப்படுத்துவதற்கு அமைச்சரவை கடந்த ஜூன் மாதம் 14ஆம் திகதி அனுமதி வழங்கியிருந்தது.

மாகாண மருத்துவமனைகளை கொழும்பு அரசு கையகப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு வடக்கு மாகாணத்திலிருந்து கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், வடக்கு மாகாணத்தின் 4 மாவட்ட மருத்துவமனைகளையும், கம்பகா மருத்துவமனையையும் தவிர்த்து ஏனைய 4 மாவட்ட மருத்துவமனைகளையும் கொழும்பு அரசுக்கு கையகப்படுத்தும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்திலுள்ள 4 மாவட்ட மருத்துவமனைகளில் பணியாற்றும் மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட சகல தரத்தையும் சேர்ந்த பணியாளர்களில் கொழும்பு அரசின் கீழ் பணியாற்ற விரும்புபவர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அந்தந்த மருத்துவமனைகளுக்கு கொழும்பு அரசு கடிதம் அனுப்பியிருந்தது. இதுவரை எந்தவொரு சம்மதக் கடிதமும் கொழும்பு அரசுக்கு வடக்கின் 4 மாவட்ட மருத்துவமனைகளிலிருந்தும் அனுப்பி வைக்கப்படவில்லை. (ஒ,5)

## தமிழ்...

டுத்து வவுனியா மேல் நீதிமன்றால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த நடேசன் தருமராசா, வவுனியாவைச் சேர்ந்த ஜோசப் செபஸ்ரியான், கிளிநொச்சியை சேர்ந்த நடராசா சர்வேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கண்ணதாசன் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களில் நடேசன் தருமராசா தனது ஒருவருட புனர்வாழ்வை முடித்து இயல்புவாழ்க்கையில் ஈடுபட்டிருந்த சமயம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டு சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டார். அவருடன் ஜோசப் செபஸ்ரியான் என்பவரும் கைதுசெய்யப்பட்டு இருவருக்கும் 2018 ஆம் ஆண்டு வவுனியா மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்தவகையில், வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் வவுனியா மேல்நீதிமன்றால் நிரபராதிகள் என இனங்காணப்பட்டமையையடுத்து எட்டு வருடங்களின் பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு நடராசா சர்வேஸ்வரன் கைதுசெய்யப்பட்டார். இவருக்கு எதிராக வவுனியா மேல்நீதிமன்றில் 2018 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் நிரபராதியென இனங்காணப்பட்டு நீதிமன்றால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கட்டாய ஆள்சேர்ப்பில் ஈடுபட்டார் என்ற குற்றத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைத்துறை விரிவுரையாளர் கண்ணதாசன் வவுனியா மேல் நீதிமன்றால் நேற்று விடுதலை செய்யப்பட்டார். புனர்வாழ்வின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராக பணியாற்றி வந்த கண்ணதாசன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக, பலவந்தமாக ஆள்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 2017ஆம் ஆண்டு அவருக்கு வவுனியா மேல் நீதிமன்றால் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அந்த மேன்முறையீட்டு மனு மீது இரண்டு ஆண்டுகளாக விசாரணைகள் நடைபெற்றுவந்த நிலையில் 2020 ஜூலை 22ஆம் திகதி அவரது ஆயுள் தண்டனையை ரத்துச் செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுக்க அனுமதியளித்திருந்தது. இந்தநிலையில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது. இந்த வழக்கு வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டது.

வழக்குத் தொடுநரான சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி, குற்றப்பத்திரிகையில் திருத்தம்செய்ய விண்ணப்பம் செய்தார். அதற்கு எதிர்மனுதாரர் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர். இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த வவுனியா மேல்நீதிமன்று, வழக்குத் தொடுநர் தரப்பின் விண்ணப்பத்தை நிராகரித்தது. அதனையடுத்து இந்த வழக்கில் மேலதிக சாட்சிகள் இன்மையால் வழக்கை முடிவுறுத்துகின்றோம் என்று அரசசட்டவாதி தெரிவித்தார். அதனையடுத்து கண்ணதாசன் விடுதலை செய்யப்பட்டார். (த-110)

## கோப்பாய்....

கப்பெற்றுள்ளன.

உரும்பிராய் பகுதியிலிருந்து கிடைக்கப்பெற்ற இரண்டு முறைப்பாடுகளில், சிவில் உடையில் மதுபோதையில் நின்ற பொலிஸார் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மற்றைய இரண்டு முறைப்பாடுகளிலும், அத்துமீறி வீடு புகுந்து அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகம், உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் விளக்கம் கோரியுள்ளது. (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல், கௌதம் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி!

**கொழும்பு, ஜூலை 31**

**இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி வீரர்களில் மேலும் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி சகல், கிருஷ்ணப்பா கௌதம் ஆகியோருக்கே கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது.**




இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணியில் குருனல் பாண்டியாவுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அவருடன் தொடர்பில் இருந்த 8 வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். தனிமைப்படுத்தப்பட்ட வீரர்களிலேயே சகல், கௌதம் இருவருக்கும் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. இந்த இரு வீரர்களும் இந்திய அணியுடன் தாயகம் திரும்ப முடியாது. கொரோனாவில் இருந்து குணம் பெற்ற பின்னர் அவர்கள் தாய் நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுவர். அதேநேரம் தனிமைப்படுத்தப்பட்ட ஏனைய ஆறு வீரர்களுக்கும் பி.சி.ஆர் சோதனை மீண்டும் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம)




## அரையிறுதிக்கு சென்றார் சிந்து

டோக்கியோ, ஜூலை 31

டோக்கியோ ஒலிம்பிக்கின் மகளிர் பூப்பந் தாட்டத் தொடரில் ஜப்பான் வீராங்கனையை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் இந்திய வீராங்கனையான பி.வி.சிந்து.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில் ஜப்பான் வீராங்கனை அகானே யமகுச்சியுடன் சிந்து மோதினார். இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சிந்து 21:13, 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

## மன்செஸ்டர் யுனைற்ரெட்டுக்கு வார்னியை மாற்றியது மட்ரிட்!

மட்ரிட், ஜூலை 31

கழகங்களுக்கு இடையிலான இந்தப் பருவகால கால்பந்தாட்டத் தொடர்கள் இன்னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், ரியல் மட்ரிட் அணி வார்னியை 'கழகப் புரிந்துணர்வு' அடிப்படையில் மாற்றியுள்ளது.

இதன்படி வார்னி ரியல் மட்ரிட்டில் இருந்து இங்கிலாந்தின் மன்செஸ்டர் யுனைற்ரெட்டுக்கு மாற்றப்பட்டுள்ளார். ஏற்கனவே ராமோஸ் உள்ளிட்ட முக்கிய வீரர்கள் அணியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் வார்னியின் வெளியேற்றம் அணியைப் பின்னடைவுக்குள் தள்ளும் என்று ரியல் மட்ரிட் ரசிகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம)



**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் உள்ள
**ரெஸ்ரோரன்டிற்கு**

- சமையலாளர்கள் - 02
  - பிறைட் றைஸ்
  - கொத்துபோடத் தெரிந்தவர்கள்
- சமையல் உதவியாளர் - 01
- சப்பிளையர் - 01

(பகுதிநேரமாக இணைய விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்)

தொடர்பு: 076 932 7890

**தவறவிடப்பட்டது**

நேற்று (30.07.2021) பலாலி வீதி தொடக்கம் யாழ்ப்பாணத்திற்கு இடைப்பட்ட பகுதியில் நேசதுரை றினோசாந்த் (971940484V) என்பவருடைய பணப்பை தவறவிடப்பட்டுள்ளது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

076 325 9495, 077 8550 336

**வேலைக்கு பெண்பிள்ளை தேவை**

பருத்தித்துறை புலோலிப் பகுதியில் வசிக்கும் வயோதிபத் தாயாருடன் தங்கி இருந்து வேலை செய்ய பெண் பிள்ளை தேவை

தொடர்பு 077 177 1906

## மரண அறிவித்தல்

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. சங்கீதம் 116:15



### திருமதி அருந்தவமலர் துரைராஜா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி அருந்தவமலர் துரைராஜா** நேற்று (30.07.2021) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி மரியாம்பிள்ளை - கனகம்மா ஆகியோரின் பாசமிகு மகளும், கந்தையா துரைராஜா அவர்களின் பாசமிகு மனைவியும் டெய்சி டேவிட் அருள்ராஜ், ஜெரி, சலோமி சேந்தன் (ஜேர்மன்), யூட் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், டேவிட் அருள்ராஜ், சேந்தன், அனுஷா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டெமற்றியா, டெவோன், டெரோன், காலேப், ஜோன் ஆரிக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அருட்செல்வி (கனடா), அருந்தவராஜன் (கனடா), அமலதாஸ் (லண்டன்), அமிர்தா (கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனையானது இன்று (31.07.2021) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக எக்காலத்தொனி பூரண சுவிசேஷ சபை சேமக்காலைக்கு (நுணாவில்) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் கோவில் வீதி,**
**மட்டுவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.